03rd SEPTEMBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 46 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com



ஜனாதிபதி தேர்தல் வெற்றியின் பின்

# புதிய மக்கள் பிரதிநிதிகளிலிருந்தே அமைச்சரவையை நியமிப்பேன்

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதி!

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் தனது விருப்பத்திற்கு அமைய அமைச்சரவையை நியமிக்காது நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டு புதிய பாராளுமன்றத்திற்கு அனுப்பப்படும் மக்கள் பிரதிநிதிகளில் இருந்து அமைச்சரவையை நியமிப்பதாக "Ask Me Anything" விசேட நிகழ்ச்சியில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

02ம் பக்கம்பார்க்க...



# தபால் மூல வாக்களிப்பு நாளை ஆரம்பம்

(ஐ.ஏ. காதிர் கான் )

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, செப்டம்பர் 04, 05 மற்றும்

02ம் பக்கம்பார்க்க...

சிங்கப்பூரின் one-chop அணுகுமுறை

# 38 நாடுகளுக்கான வீசா கட்டணம் இரத்து

## அமைச்சரவை முடிவு

சிங்கப்பூரின் நெறிப்படுத்தப்பட்ட 'one-chop' அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு உடனடியாக அமலுக்கு வரும் வகையில், 38 நாடுகளுக்கான விசா கட்டணத்தை ரத்து செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

02ம் பக்கம்பார்க்க...

# நாமல் ராஜபக்ஷவின் விஞ்ஞாபனம் வெளியீடு

## ஊழல் மோசடிகளை ஒழிப்பதாகவும் உறுதி



பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று கொழும்பிலுள்ள ரத்னதீப ஹோட்டலில் இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற

02ம் பக்கம்பார்க்க...

அரச ஊழியர்களின் சேவைக்கு அங்கீகாரம்;

# 24 வீத சம்பள அதிகரிப்பு

## முல்லைத்தீவில் சஜித் பிரேமதாச

அரசாங்கத்தின் வரிச்சுமைகளில் இருந்து அரச ஊழியர்களை மீட்டு அவர்களின் சேவைக்கான அங்கீகாரத்தை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து அரச ஊழியர்களின் சம்பளத்தை 24% ஆக அதிகரிப்பதோடு, வழங்கப்படுகின்ற வாழ்க்கைச் செலவை கொடுப்பனவை 25,000 ரூபா வரை அதிகரித்து, அடிப்படை சம்பளத்தை 57,500 வரை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம். அரச

03ம் பக்கம்பார்க்க...

# சஜித்தை ஆதரிக்கும் கட்சி முடிவை ஒற்றுமையாக நடைமுறைப்படுத்துவோம்



## மாவை சேனாதிராஜா உறுதி

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித்

02ம் பக்கம்பார்க்க...



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்;

# புதிதாக வேட்புமனு கோர அமைச்சரவை தீர்மானம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்புமனுக்களை இரத்துச்

02ம் பக்கம்பார்க்க...

# 22ல் பாராளுமன்றம் கலைப்பு

## ஜே.வி.பி.உறுப்பினர் ஹரினி அமரசூரிய

ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கும் அரசியலமைப்பு விதிகளைப் பயன்படுத்தி, செப்டெம்பர் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைக்க தேசிய மக்கள் சக்தி உத்தேசித்துள்ளதாக

04ம் பக்கம்பார்க்க...


அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## சிங்கப்பூரின்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியுள்ளது.

இது உடனடியாக நடைமுறைக்கு வரும் என்று சுற்றுலா அமைச்சகத்தின் ஆலோசகர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் ஏற்றுக்கொண்ட "one-chop' முறை என்பது, விண்ணப்பதாரரின் கடவுச்சீட்டில் ஒரே ஒரு அதிகாரப்பூர்வ முத்திரை அல்லது முத்திரையுடன் (உாழி) விசா அல்லது விசா நீடிப்பை வழங்குவதற்கான மிகவும் நெறிப்படுத்தப்பட்ட செயன்முறையைக் குறிக்கிறது.

இந்த அணுகுமுறை விண்ணப்பதாரர்களுக்கு விரைவான மற்றும் நேரடியான செயன்முறையை விரைவுபடுத்த வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஹறின் பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

கூடுதல் ஒப்புதல்கள் அல்லது சிக்கலான நடைமுறைகள் இல்லாமல் விசா அங்கீகரிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, 2024ஆம் ஆண்டு ஒக்டோபர் 01ஆம் திகதி முதல் 35 நாடுகளுக்கு விசா இன்றி இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இருப்பினும், தற்போதைய "வன் சொப்" முறை உடனடியாக நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாமல்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோதபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ,சமல் ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பத்தினரும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ மூன்று ஆண்டுகளுக்குள் ஊழல் மோசடிகளை ஒழிப்பதாகவும் அதற்கான திட்டங்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பின்னர், மீண்டும் வேட்புமனுக்களை கோருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நேற்று (02) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

## தபால்..

(முன் பக்கத் தொடர்ச்சி)

06 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 7,36,589 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவற்றுள் 24,268 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், 2024 ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 712,321 பேர் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தபால் மூலம் வாக்களிக்க முடியாதவர்களுக்கு மேலதிக திகதியாக, செப்டம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஜித்தை..

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம் என்று அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சுகவீனம் காரணமாக நேற்றைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நான் கலந்துகொள்ள முடியவில்லை.

ஆனாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழு நேற்றுமுன்தினம் எடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கல், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரனை ஆதரிப்பதில்லை, எமது கட்சி உறுப்பினராகிய அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து உடனடியாக விலக வேண்டும் ஆகிய மூன்று தீர்மானங்களையும் ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம்." - என்றார். இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று வெளியாகியுள்ள தகவல், கட்சியின் முடிவல்ல என்றும், இது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு என்றும் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி..

(முன் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கடவுச் சீட்டு விவகாரம் குறித்து கருத்து தெரிவித்த அவர், கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு அரசாங்கம் விரைவில் தீர்வு காணும் என்றும், இந்நாட்டு கடவுச்சீட்டுக்களை டிஜிட்டல் மயமாக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் ஒருபோதும் கைவிடப்படாது என்றும் "Ask Me Anything" சிறப்பு நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இங்கு கேட்கப்பட்ட மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர் சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் வேறு கட்சிகளை ஆதரித்தாலும் மக்கள் தனக்கு ஆதரவாகவே இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

**அசு ர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு: 070 239 7210**






## அரச..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஊழியர்களையும் மத்திய வகுப்பினரையும் அரசாங்கத்தின் வரிச்சுமையிலிருந்து விடுவித்து 6–36வீ வரையாக காணப்படுகின்ற வரி சூத்திரத்தை 1 – 24வீ வரை குறைப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்கு வழங்கப்படுகின்ற 15வீ வட்டியை தொடர்ந்து வழங்குவதோடு, ஓய்வூதிய கொடுப்பனவையும் சரியாக வழங்க நடவடிக்கை எடுப்போம். பாதுகாப்பு துறையில் உள்ளவர்களுக்கான கொடுப்பனவுகளையும், பதவி உயர்வுகளையும் சரியான முறையில் வழங்குவோம். பொலிஸாருக்கு தற்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 3 மாதத்துக்கான மேலதிக கொடுப்பனவை தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த மக்கள் வெற்றிப் பேரணித் தொடரின் 30 ஆவது பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் இன்று(02) முல்லைத்தீவு நகரில் வெற்றிகரமாக இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வித்துறையும் சுகாதாரத் துறையும் விரிவுபடுத்துவதோடு எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு பிரபஞ்சம், மூச்சு, போன்ற வேலைத்திட்டங்களின் ஊடாக ஒரு பில்லியன் பெறுமதியான சேவைகளை கல்விக்கும் சுகாதாரத்துக்கும் செய்திருக்கின்றோம். தான் சொல்வதைச் செய்கின்ற, செய்வதைச் சொல்கின்ற நபர் என்ற அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள அனைத்து விடயங்களையும் இந்த மண்ணின் நிதர்சனமாக அதனை உண்மைப்படுத்துவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

– மீண்டும் கம் உதாவ யுகத்தை உருவாக்குவோம்.

பெண் தலைமைத்துவம் உள்ள குடும்பங்களுக்கு விசேட வாழ்வாதார செயற்திட்டத்தை ஆரம்பிப்போம்.

அங்கவீனர்களுக்காக விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதன் ஊடாக அவர்களை பொருளாதாரத்தின் பங்காளர்களாக இணைத்துக் கொள்வதற்கான பாரிய வேலை திட்டத்தையும் முன்னெடுப்போம். கோட்டாபய, ரணில் விக்ரமசிங்க ஆகிய ஜனாதிபதிகளுடைய காலத்தில் நிறுத்தப்பட்ட வீடமைப்பு திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதோடு, காணி இல்லாதவர்களுக்கும், வீடு இல்லாதவர்களுக்கும் கம் உதாவ யுகத்தை மீண்டும் உருவாக்கி தீர்வை பெற்றுத் தருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு நாட்டின் பல பகுதிகளில் காணிப்பிரச்சினை காணப்படுகின்றது. காணி இல்லாதவர்களும், காணி கிடைக்க பெறாதவர்களும், காணி இருந்தும் உறுதிப் பத்திரம் இல்லாதவர்களும் இருக்கின்றார்கள். இதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்றை தாபித்து, அதன் ஊடாக காணி இருந்தும் உறுதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

– அதிகாரத்தை கோரும் மாற்று நபர்களும் ஜனாதிபதியும் நாட்டுக்கு செய்தது எதுவும் இல்லை.

இந்த முறை ஜனாதிபதி தேர்தலில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை ஜனாதிபதி உட்பட அனைவரும் முன் வைத்திருக்கின்றார்கள். திட்டங்களை முன் வைப்பதற்கு பதிலாக சேவைகளை செய்வதையே ஜனாதிபதி செய்ய வேண்டும். இந்த பதில் ஜனாதிபதி அவருடைய பதவி காலத்தில் எந்த ஒரு தொழிற்சாலையும் உருவாக்கவில்லை. அதிகாரத்தை கோருகின்ற மாற்று நபர்களும் தொழிற்சாலைகளை உருவாக்குவதை விட அவற்றை தீயிட்டு கொளுத்துவதையே வழக்கமாக கொண்டிருக்கின்றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

– சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டுவோம்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக வடகிழக்கு மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற, சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டின் ஊடாக இந்த வேலை திட்டங்களுக்கு அதிகளவான உதவிகளைப் பெற்றுக் கொண்டு, பெருந்துகையான வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொண்ட யுகமாக இந்த யுகத்தை மாற்றுவோம். அதனூடாக நாட்டுக்கு அபிவிருத்தியை கொண்டு வருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

– கடற்றொழிலாளர்களுக்கான சலுகைகள்.

மீன்பிடித் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். துறைமுகங்கள் நங்கூரமிடக்கூடிய நிலப்பிரதேசங்கள் என்பனவற்றை சர்வதேச நிவாரணங்களை மையப்படுத்தி விருத்தியடையச் செய்வதோடு, மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம். அத்தோடு ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி துறையின் ஊடாக மீன்பிடித் தொழிலை உயர்ந்த மட்டத்திற்கு அபிவிருத்தி அடையச் செய்யவும் நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

– நிலையான எரிசக்திக்கு முன்னுரிமை.

சூரிய சக்தி மற்றும் நிலையான எரிசக்தி கட்டமைப்பை ஏற்படுத்தி, ஸ்தீரமான எரிசக்தி கட்டமைப்புக்கு முன்னுரிமை வழங்கி, தொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியும். அதற்காக மாங்குளம் பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தி மத்திய நிலையமொன்றை உருவாக்கி, அதனூடாக வீட்டுப் பொருளாதாரத்தையும் முன்னேற்ற முடியும். வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர் யுதிகளுக்காக தொழிற்சாலைகளை உருவாக்குவதோடு, அதனூடாக நேரடியாக வெளிநாட்டு முதலீட்டையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

– வனவிலங்கு சுற்றுலாத் துறையில் ஈடுபடுதல்

விவசாயத்தையும் சுற்றுலாத்துறையின் மேம்படுத்த வேண்டும். வனவிலங்கு பிரதேசங்களை வளமாக மாற்றி, வன ஜீவராசிகளை மையமாகக் கொண்ட சுற்றுலாத் துறைக்கான புதிய வேலை திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி, சுற்றுலாத்துறை மேம்படுத்துவதற்கு, சுற்றுலா நகரங்களை உருவாக்குவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

– ஊழலுக்கு எதிரான திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

ஊழலுக்கு எதிரான வேலைத்திட்டங்களை சரியான முறையில் நிறைவேற்றி, நாட்டில் இருந்து திருடப்பட்ட அனைத்து சொத்துக்கள், பணம் என்பன மீண்டும் நாட்டுக்கு கொண்டு வரப்படும். நாட்டுக்கான வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்

## சஜித்தை சந்தித்த சஹ்மி



**(ஐ.ஏ. காதிர் கான்)**

சமாதானத்தின் தூதை ஏந்தி, நடை பவணியாக நாட்டைச் சுற்றி வந்த பேருவளையைச் சேர்ந்த சஹ்மி ஷஹீத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்தார்.

சமாதானத்தின் தூதை ஏந்தி, சுமார் 1500 கிலோ மீற்றர் தூரம் நடை பவணியாக நாட்டைச் சுற்றி வந்த "பேருவளை சஹ்மி ஷஹீத்" எனும் இளைஞன், தனது பயணத்தை முடித்துக் கொண்டதன் பின்பு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இன்று(30) சந்தித்தார்.

இதன்போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மகிழ்ச்சிப் புன்முறுவலுடன் சஹ்மி ஷஹீதை வரவேற்று, வாழ்த்தி, கைலாகு கொடுத்தார்.

இலங்கையின் கரையோரப் பாதைகளில் 1500 கிலோ மீற்றர் நடை பயணத்தை 45 நாட்களில் நிறைவு செய்த இந்த இளைஞன், அண்மையில் தனது இலக்கை பேருவளை நகரில் நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 SEPTEMBER 03 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அரசியல் மேடைகளில் பேசும் முஸ்லிம் தலைமைகளின் கவனத்துக்கு!

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகள் தற்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. தத்தமது வாக்கு வங்கியினை அதிகரித்துக் கொள்வதற்காக பிரதான ஜனாதிபதி அபேட்சகர்கள் களத்தில் இறங்கி முன்முரமாக செயல்படுகிறார்கள்.

இறுதியாக 2019 இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இருந்த பாதுகாப்பு அச்சமும் பெரும்பான்மை வாத மேலாதிக்க மனோநிலயும் முஸ்லிம் விரோத வெறுப்புணர்வும் கோட்டாபாய ராஜபக்சவின் வெற்றியில் பங்களிப்பு செலுத்தின.

எனினும் பொருளாதார சிக்கல்களும் இவரது அரச நிர்வாக முதிர்ச்சியற்ற நிலையும் தவறான பொருளாதார அணுகுமுறைகளும் மக்களிடையே அவரை வெகு விரைவில் செல்வாக்கு இழந்த தலைவராக்கிறதோடு , ஜனாதிபதி பதவியையும் விட்டுச் செல்ல நேர்ந்தது.

இந்த முறை தெரிவு செய்யப்படப்போகும் ஜனாதிபதிக்கு முன்னால் உள்ள பிரதான சவாலாக பொருளாதார ஸ்திரத்தன்மை கொண்ட ஒரு நாட்டை காட்டியது என்ற விடயம் பிரதானமாக இருக்கிறது. இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான அரசியல் கட்சிகளது வேட்பாளர்கள், பொருளாதார ரீதியான நாட்டை கட்டி எழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை முன்வைத்து பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். வழக்கமாக மேடை ஏறுகின்ற வசை பாட்டு அவதூறு அரசியலில் இருந்து கருத்து ரீதியான, கொள்கை ரீதியான பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை இவர்களுக்கு இருக்கின்றது.

ஆனால், மறுபுறம், வழமை போன்று இந்த தேர்தலிலும் முஸ்லிம் சமூகத்தின் வாக்கு வங்கி பல வேட்பாளர்களுக்கு பங்கிடப்பட்டிருக்கிறது. இது அவரவர் ஜனநாயக உரிமை என கூறி கடந்து சென்றுவிடலாம். ஆனால் அண்மைக்காலமாக பிரதான வேட்பாளர்கள் பிரசார மேடைகளில் முஸ்லிம் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள் பேசிய பேச்சுக்கள் இப்போது பிரதான பேசுபொருளாக மாறி சமூக வலைதளங்களில் சுற்றி வருகின்றன .

கொள்கை விளக்கங்கள், சிந்தனை தெளிவுகள், எதிர்கால செயற்திட்டங்கள் என்பனவறை முன் வைப்பதற்கு பதிலாக சேறு பூசம் அவதூறு அரசியலை செய்து வருகிறார்கள்.

ஒரு தரப்பு அரசியல் முகாமில் உள்ள தலைவர்கள் மாற்று அரசியல் முகாமில் உள்ள தலைவர்களை வசை பாடி வருகிறார்கள். பரஸ்பரம் ஏட்டிக்கு போட்டியாக குற்றச்சாட்டுகளும் அவதூறுகளும் அள்ளி வீசப்படுகின்றன.

கருத்துக்களை கருத்துகளால் எதிர்கொள்ளும் முதிர்ச்சியான தன்மையினை இந்த தலைவர்களிடத்தில் காண முடியவில்லை. இவர்கள் இதனால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட போகும் பாதிப்புகள் குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளவதாக தெரியவில்லை.

தேர்தல் காலம் என்பதால் எங்கும் எதனையும் சொல்லிச் சொல்லலாம் என இவர்கள் நினைப்பது போலும் .ஆனால் இந்த மேடைகளில் உன் வீட்டு சண்டைகள் மூலம் வெளிவரும் கருத்துக்கள் எங்கோ ஒரு மூலையில் பதியப்படுகிறதன. அது அவசியமான நேரத்தில் கால் கை வைத்து பொது வெளிக்கு கொண்டுவரப்பட்டு முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களாக பாவிக்கப்படும் என்பதை கடந்தகால அனுபவங்கள் மூலம் இவர்கள் உணர்ந்து கொள்ள தவறி விட்டார்கள்.

இவர்களது இந்த கீழ்த்தரமான சொற்பிரயோகங்கள் பிரசார நடவடிக்கைகள் இவர்களது கீழ்த்தரமான மனநிலையை எடுத்துக்காட்டுகின்றன. கனவான் தன அரசியலை இவர்களால் செய்ய முடியவில்லை. கருத்துக்களை கருத்துக்களால் எதிர்நோக்க முடியவில்லை .

– அடேய் மோட்டுச் சாம்பிராணியே...
– அடேய் பைத்தியகார நாயே...
– அடேய் துரோகியே....

இது போன்ற சொற்றொடர்களை தாராளமாக இன்று மேடைகளில் கேட்கலாம்.

அறிஞர் ஒருவர் கூறுவது போன்று , உயர்ந்த உள்ளங்களை கொண்ட மனிதர்கள் கருத்துக்களையும் கொள்கைகளையும் கலந்துரையாடுவார்கள். நடுநிலையான மனங்களை கொண்டவர்கள் சம்பவங்களை பற்றி அலசுவார்கள்.

கீழ்தரமான தனமான மனநிலை கொண்டவர்கள், தனி நபர்களது தனிப்பட்ட விஷயங்கள் குறித்து கதைப்பார்கள், அனுசுவார்கள் இந்த வகையில் தற்போது இந்த அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களது பேச்சுக்களை வைத்து பார்க்கின்றபோது இந்த மூன்றாம் படி நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்பது தான் உண்மை. இது ஒரு வகையில் சமூகத்தின் வங்குரோத்து நிலையையும் எடுத்துக்காட்டுகின்றது. ஏனென்றால் இந்த தலைவர்களை தேர்வு செய்பவர்கள் சாதாரண மக்களேயாகும்.

தமக்கு வாக்களித்து தம்மை தெரிவு செய்கின்ற இந்த மக்களின் மனோநிலையை இந்த தலைவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். சுவாரசியமான கதைகள் மூலமும் அவதூறு , தூற்றல்கள் மூலம் இவர்களை ஏமாற்றலாம் என்றும் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

அரசியல் ரீதியான விழிப்புணர்வும் முதிர்ச்சி தன்மையும் முஸ்லிம் சமூகத்தில் இன்னும் ஏற்படவில்லை என்பதைத்தான் , கீழ்தர அரசியல் செய்யும் இந்த தலைவர்களுக்கு இன்னும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கிறது என்பது எடுத்துக்காட்டுகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். சமூக மக்களின் மனோநிலையும் அறிவு நிலையும் மாறாத வரையில் இந்த கோமாளி அரசியல் வழிமுறை தொடரத்தான் போகிறது.

## 22ல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது இதனை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் பேசிய அவர்,

இந்த திருடர்களுடன் ஒரு நாள் கூட ஈடுபடுவதற்கு நாங்கள் எந்த காரணத்தையும் காணவில்லை.

புதிய அமைச்சரவை மற்றும் செயலாளர்களை நியமிக்க ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு அதிகாரம் உள்ளது.

22ஆம் திகதி அனுரகுமார திஸ ாநாயக்க எமது நாட்டிற்கு சிறந்த தீர்மானத்தை எடுப்பார், அதற்கு தேவையான ஏற்பாடுகளுடன் நாங்கள் தயாராக உள்ளோம்எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவரின் கீழ், அமைச்சரவையும் பிரதமரும் உடனடியாக பதவி நீக்கப்படுவார்கள், அதற்கு தேவையான சட்ட ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் குழப்பத்தை ஏற்படுத்துவதிலேயே கவனம் செலுத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிய வேலைவாய்ப்புகளைக் கொண்டுவர தனியானதொரு வேலைத் திட்டம்

## தொம்பே கூட்டத்தில் ரணில்!



நாடு நெருக்கடியில் இருந்த போது பிரதமர் பதவி விலகிய சந்தர்ப்பத்தில் அந்தப் பதவியை எதிர்க்கட்சித் தலைவர் ஏற்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறிய போதிலும், சஜித் பிரேமதாச அதனை ஏற்காது ஓடி ஒளிந்துவிட்டதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச செய்த தவறையே அனுரவும் சஜித்தும் செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வீட்டைக் கட்டுவதைப் போல படிப்படையாக நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் எனவும், ரூபாய் வலுவடைந்ததால் பொருட்களின் விலைகள் குறைந்தது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொம்பே பிரதேசத்தில் இன்று நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மழையுடன் கூடிய காலநிலை நிலவியதால் இந்தக் கூட்டதில் கலந்துகொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதிக்கு அறிவித்த போதிலும், மக்கள் தனக்காக மழையில் நனைந்துகொண்டு காத்திருப்பதாக கூறி, அந்தக் கூட்டத்தில் ரணில் விக்ரமசிங்க பங்கெடுத்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"வவுனியாவில் ஆரம்பித்து கெகிராவ, சிலாபம் ஆகிய கூட்டங்களை முடித்துவிட்டு தொம்பே வந்ததால் தாமதமாகிவிட்டது. அதனால் மக்களிடம் மன்னிப்பு கோருகிறேன். மக்கள் மழையில் நனைந்துகொண்டு காத்திருந்தீர்கள். நீங்கள் நோய்வாய்ப்பட்டால் செப்டம்ர் 21 வாக்களிக்க முடியாமல் போகும் என்பதையும் நினைவுபடுத்துகிறேன்.

இரு வருடங்களுக்கு முன்பு வரிசையில் நின்றதாலேயே இன்று பலர் இங்கு நிற்கிறீர்கள். அன்று இறப்பதற்கும் வரிசையில் நிற்க வேண்டியிருந்தது. பிரதமர் விலகினால் எதிர்கட்சித் தலைவருக்கு இடமளிக்க வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி கூறினார்.

ஆனால் அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள பயமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். சரத் பொன்சேகாவும் மறுத்தார். அனுரகுமார கேட்கவே இல்லை. ஆனால் நாட்டின் நிலை மோசமாக உள்ளதை அறிந்தே நான் ஏற்றுக்கொண்டேன். இப்போது என்னோடு இருப்பவர்கள் எனக்கு ஆதரவளித்தால் நான் ஏற்றுக்கொண்டேன்.

நாட்டை பொறுப்பேற்க விரும்பாத சஜித்தும் அனுரவும் நான் பதவியேற்பதையும் விரும்பவில்லை. பாராளுமன்றத்தை கையகப்படுத்தவும் ஒரு குழு வந்தது பாராளுமன்றத்திலிருந்த தலைவர்கள் அஞ்சி ஓடினர். முடக்க வந்தவர்களை இராணுவத்தை கொண்டு தடுத்தோம்.

வீட்டைக் கட்டுவதை போல படிப்படையாக நாட்டைக் கட்டியெழுப்புவேன். ரூபாய் வலுவடைந்ததால் பொருட்களின் விலை அவர்களும் செய்யப் பார்க்கின்றனர்.

இளையோருக்கு நான்கு வருடங்கள் தொழில் கிடைக்கவில்லை. அரச, தனியார் துறைகளில் அவர்களுக்கு பயிற்சியுடன் வேலை வழங்குவோம். நவீன விவசாயத்திற்குள் உள்வாங்குவோம். ஏற்றுமதியை ஊக்குவிப்போம். சுற்றுலாவை ஊக்குவிப்போம். புதிய முதலீடுகளை கொண்டுவர தனியொரு வேலைத்திட்டம் உள்ளது.

அதேபோல் சஜித்திற்கும் வழங்கும் வாக்குகள் அனுரவுக்கு வழங்கும் வாக்குகளுக்கு சமமானவை என்பதை ஐக்கிய தேசிய கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும். அதனால் செப்டம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது முதலீட்டு வலயமும் கிடைக்காது." என்றார்.

இப்போது சஜித்துடன் நல்ல குழு இருப்பதாக சொல்கிறார்கள். அந்த நல்ல குழு அன்று ஓடி மறைந்துகொண்டதை மறந்துவிட்டனர்.

அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து கீழ் மட்ட அரச ஊழியர் ஒருவரின் சம்பளம் 55 ஆயிரம் ரூபாய் வரையில் அதிகரிக்கும். இப்போது சஜித் 57 ஆயிரம் ரூபா தருவதாக சொல்கிறார். அதற்காக வருமானம் ஈட்டுவதற்கான வழிகள் எவையும் அவருக்கு தெரியாது. " என்றார்.



# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### நிராகரிப்பும் நற்காரியமும்

"எவன் (அல்லாஹ்வை) நிராகரிப்பவனாக இருக்கின்றானோ அவனுடைய நிராகரிப்பு அவனுக்கே கேடாக முடியும். எவன் நற்காரியங்களைச் செய்கின்றானோ அவன் (அதனை மறுமையில்) தனக்கு நன்மையாகவே அமைத்துக் கொள்கிறான்." (30:44)

"விசுவாசம் கொண்டு நற்கருமங்கள் செய்தவர்களுக்கே அவன் தன் அருள்களிலிருந்து கூலி கொடுக்கின்றான். (ஏனென்றால்) நிச்சயமாக அவன் நிராகிரிப்போரை நேசிப்பதில்லை" (30:45)

### நாயகனுக்கு அடுத்து நன்றிக்குரியோர்

"தமது தாய் தந்தை(க்கு நன்றி செய்வது) பற்றி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பம் அனுபவித்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள். (அவன் பிறந்த பிறகும் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே பால் மறக்கடித்தாள். (ஆகவே மனிதனே) நீ எனக்கும் உன்னுடைய தாய் தந்தைக்கும் நன்றி செலுத்தி வா (முடிவில் நீ என்னிடமே வந்து சேரவேண்டியிருக்கிறது" (31:14)

"எனினும் (ஆண்டவன்) என்று நீ அறியாததை எனக்கு இணைவைக்கும்படி அவர்கள் உன்னை நிர்ப்பந்தித்தால் (அவ்விஷயத்தில்) நீ அவ்விருவருக்கும் வழிப்பட வேண்டாம். ஆயினும் இவ்வுலகத்தில் (நன்மையான காரியங்களில்) நீ அவ்விருவருடனும் அன்புடன் ஒத்து வாழ். (எவ்விஷயத்திலும்) என்னையே நோக்கி நிற்போரின் வழியை நீ பின்பற்றி நடந்து வா. பின்னர் நீங்கள் (யாவரும்) என்னிடமே வந்து சேர வேண்டியிருக்கிறது. நீங்கள் செய்து கொண்டிருந்ததைப் பற்றி (அது சமயம்) நான் உங்களுக்கு அறிவுறுத்துவேன்" (31:15)

"லுக்மான் தம் குமாரனுக்கு நல்லுபதேசம் செய்தபோது, என்னருமை மைந்தனே நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே.(ஏனென்றால்) நிச்சயமாக இணைவைப்பது மகத்தான ஓர் அக்கிரமமாகும் என்று கூறினார்" (31:13)

பூமியில் எங்கு சென்ற போதும் "விசுவாசம் கொண்ட என்னுடைய அடியார்களே நிச்சயமாக என்னுடைய பூமி (மிக்க) விசாலமானது. (அதில்) நீங்கள் (எங்கு சென்றபோதிலும்) என்னையே வணங்குங்கள்" (29:56)

"ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும். பின்னர் நீங்கள் (விசாரணைக்காக) நம்மிடமே கொண்டுவரப்படுவீர்கள்." (29:57)

"எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்கள் செய்கின்றார்களோ அவர்களை நீரருவிகள் சதா ஓடிக் கொண்டேயிருக்கும் சுவனபதியிலுள்ள மேன்மாடிகளில் நிச்சயமாக நாம் அமர்த்துவோம். அதில் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள். நன்மையான செயல் புரிவோரின் கூலியும் ஒன்றே" (29:58)

இவர்கள் (தங்களுக்கேற்பட்ட) கஷ்டங்களைப் (பொறுமையுடன்) சகித்துக் கொண்டு தங்கள் இறைவனையே நம்பியிருப்பார்கள்" (29:59)

"(விசுவாசிகளே) நீங்கள் பொழுது புலரும்போதும், பொழுது சாயும்போதும் அல்லாஹ்வைத் துதி செய்து கொண்டிருங்கள்" (30:17)

"(விசுவாசிகளே நீங்கள் யாவரும்) அவன்பாலே திரும்பவேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். எனவே அவனுக்குப் பயந்து தொழுகையையும் கடைப்பிடியுங்கள். இணைவைத்து வணங்குவோரில் நீங்களும் ஆகிவிடாதீர்கள்"(30:31)

### ஒருவரின் பாவச் சுமையை :

"தன் அடியார்கள் (தன்னை) நிராகரிப்பதை விரும்புவதே இல்லை. நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவீர்களாயின், உங்களைப் பற்றி அவன் திருப்தியடைவான். ஒருவனின் (பாவச்) சுமையை மற்றொருவன் சுமக்க முடியாது. இனி நீங்கள் செல்ல வேண்டியது உங்கள் இறைவனிடம்தான். அச்சமயம் நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளை

அவன் உங்களுக்கு அறிவிப்பான். இருதயங்களில் உள்ளவைகளை நிச்சயமாக அவன் நன்கறிகின்றான்" (39:07)

"எவன் மறுமையைப் பயந்து தன் இறைவனின் அருளை எதிர்பார்த்து இராக்காலங்களில் நின்றவனாகவும், சிரம் பணித்தவனாகவும் (அல்லாஹ்வை) வணங்கிக் கொண்டிருக்கின்றானோ (அவன் விசுவாசம் கொள்ளாது நிராகரிப்போனைப் போலாவானா? (நபியே!) நீர் கேளும் அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? (இந்த அல்குர்ஆனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோரெல்லாம் கல்வி அறிவுடையோரே" (39:09)

### விரும்பியதைச் செய்து கொள்ளலாம்

"நிச்சயமாக எவர்கள் (தங்கள் தீய செயல்களுக்கு ஆதாரமாக) நம்முடைய வசனங்களில் தப்பர்த்தங்களைக் கற்பிக்கின்றார்களோ அவர்களுடைய செயல்களில் (ஒன்றுமே) நமக்கு மறைந்து விடாது. மறுமையில் நரகத்தில் எறியப்படுபவன் நல்லவனா? அல்லது மறுமை நாளில் எத்தகைய பயமுமற்றவனாக வருப(வன் மேலான)வனா? (மனிதர்களே) நீங்கள் விரும்பியதைச் செய்து கொண்டிருங்கள். நீங்கள் செய்பவைகளை நிச்சயமாக அவன் உற்று நோக்கினவனாகவே இருக்கின்றான்"" (41:40)

"நிச்சயமாக எவர்கள் தங்களிடம் நல்லுபதேசம் வரும்போது நிராகரிக்கின்றார்களோ (அவர்கள் மறுமையில் தங்கள் நிலைமையை உணர்ந்து கொள்வார்கள். ஏனென்றால்) நிச்சயமாக இது மிக்க கண்ணியமான ஒரு வேதமாகும்" (41:41)

### தமக்குத் தாம் தேடியதே

எவரேனும் நன்மை செய்தால் (அது) அவருக்கே நன்று. எவனேனும் பாவம் செய்தால் (அது) அவனுக்கே கேடாகும். உமது இறைவன் (தன்) அடியார்களுக்கு (அறவே) தீங்கிழைப்பதில்லை. (அவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்)" (41:46)

"மனிதனுக்கு நாம் (யாதோர்) அருள் புரிந்தால் அவன் நமக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக நம்மையும், நம்முடைய கட்டளைகளையும்) புறக்கணித்து விடுகின்றான். அவனை (ஏதும்) தீங்கு தொடர்ந்தாலோ அல்லது விலகி வெகு (அகல) நீளமான பிரார்த்தனை செய்(து அதனை நீக்குமாறு நம்மிடம் கோரு)கின்றான்" (41:51)

நிச்சயமாக அவன் (அல்லாஹ்) சகல விஷயங்களையும் (தன் ஞானத்தால்) சூழ்ந்து (அறிந்து) கொண்டுமிருக்கின்றான்" (41:54)

### மன்னிப்பும் கேடும்

(நபியே) நீர் கூறும். மெய்யாகவே நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். (ஆயினும்) உங்களுடைய ஆண்டவன் ஒருவன்தான் என்று எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அவனளவிலேயே நீங்கள் உறுதியாக நில்லுங்கள். அவனிடம் நீங்கள் மன்னிப்பையும் கேளுங்கள். (அவனுக்கு) இணைவைப்போருக்குக் கேடுதான்" (41:06)

"(அன்றி) சக்காத்துக் கொடுக்காதவர்களுக்கும் மறுமையை நிராகரிப்பவர்களுக்கும் (கேடுதான்)" (41:07)

""(ஆயினும்) எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்கள் செய்கின்றார்களோ அவர்களுக்கு நிச்சயமாக (ஒரு காலத்திலும்) முடிவுறாத (நிலையான) கூலியுண்டு" (41:08)

"உங்களுடைய செவிகளும், உங்களுடைய கண்களும், உங்களுடைய மாமிசத் (தோலிகளும்) உங்களுக்கு விரோதமாக சாட்சியங் கூறாமலிருக்க நீங்கள் (உங்களுடைய பாவங்களை அவைகளுக்கு) மறைத்துக் கொள்ள முடியவில்லை. எனினும் நீங்கள் செய்பவைகளில் அநேகமானவற்றை மெய்யாகவே அல்லாஹ் அறியவே மாட்டான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்" (41:22)

# "நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்" நூல் வெளியீடு







(அஷ்ரப் ஏ சமத்)

சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். அபுல்கலாம் அவர்களின் "நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்" எனும் நூல் வெளியீட்டு வைபவம் 31ம் திகதி கொழும்பு 10ல் உள்ள வை.எம். எம்.ஏ கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு பேராசிரியர் எம்.எஸ்.எம் ஜலால்தீன் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி நவாஸ் ,கௌரவ அதிதியாக எம்.ஜ/ஹைர் (ஜனாதிபதி சட்டத்தரணி) முன்னாள் பா.உ.யும் ஈரான் தூதுவர், சிறப்பு பேச்சு பாயிஸ் முஸ்தபா, (ஜனாதிபதி சட்டத்தரணி) தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் நூல் விமர்சனம் பேராசிரியர் பி.ஏ /ஹஸைன் மியா (வரலாற்றாய்வாளர்) உலக பல்கலைக்கழக வருகை தர விரிவுரையாளர், நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டவர் சிரேஷ்ட சட்டத்தரனி நியாஸ் சம்சுதீன் ( ஓய்வுபெற்ற மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம்)

இந் நிகழ்வில் சிரேஷ்ட சட்டத்தரணி யின் குடும்ப உறுப்பினர்கள் , தென்றல் எப்.எம் பொறுப்பதிகாரி சட்டத்தரனி ஏ.எம். தாஜ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.. அத்துடன் அமீன் எம் முஸ்தபா நன்றியுரை நிகழ்த்தினார்கள் அத்துடன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையின் அதிகாரிகள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நூல் முஸ்லிம்களின் முன்னோடிகள் அராபியர் இந்நாட்டின் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தொடர்புகள், வைத்திருந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள், மகாவம்சம், தொலமியின் உலக வரைபடம் ,சீன யாத்திரிகன் பாகியன் என்பன அடங்குகின்றன. இஸ்லாத்தின் தோற்றத்தின் தொடர்ந்து இந்த நாட்டுக்கு வந்த அராபிய ல் அனைவரும் முஸ்லிம்களாக இருந்த காரணத்தினால் இஸ்லாம் மதம் இந்நாட்டிலும் பரவியது..இங்கு விஜயம் செய்த கடலோடிகளும் யாத்திரிகர்கள் இப்னு அப்பாஸ் ,அல்பலது ரி, சுலைமான் தாஜிர் ,தாபரி இப்னு சஹ்ரியார் இப்னு வகாப் அல் மசூதி போன்ற பல அராபியர்கள் விட்டுச் சென்ற தடயங்கள், வரலாறுகள் அடங்குகின்றன. இவர்கள் பூர்வீக வரலாற்று காலம் தொட்டு முஸ்லிம்கள் இந் நாட்டில் மிகவும் அன்னியோன்னியமாக வாழ்ந்துள்ளனர் என பல வரலாற்றுத் தகவல்களை நூலாசிரியர் அபுல் கலாம் பதிவிட்டுள்ளார். இந் நாட்டில் வாழ்ந்த முஸ்லிம்கள் நாட்டு நலனில் என்ன பங்களிப்பினை செய்தார்கள் என்பதற்கு இந்நூல் பிரயோசனமாக இருக்கும் என நம்புகிறேன். இந்நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களின் இந் தகவல்களை தெரிந்து கொள்வதற்கு சிங்கள ,ஆங்கில மொழி மூலம் இந்நூல் மொழிமாற்றம் செய்யப்பட்டால் ஏனைய சமூகங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என நம்புகிறேன்.

சிரேஷ்ட சட்டத்தரணி அபுல் கலாம் ,நூலாசிரியர் பற்றி

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நாட்டுவானில் நம்மவரின் பங்களிப்பு என்ற தலைப்பில் 1986-87 காலப்பகுதியில் சுமார் 60 வாரங்கள் ஒலிபரப்பான பேச்சுத் தொடரின் செம்மை செய்யப்பட்ட அச்சுவடிமே இந்நூலாகும்.

எம்.எம். அபுல்கலாம் மருதமுனையில் பிறந்து வளர்ந்து உயர்நீதிமன்ற சிரேஷ்ட சட்டத்தரணி ஆவார். கல்முனை ஸாஹிரா கல்லூ ரியின் முதல் தடவை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்திற்கு தெரிவானவர், முதுமானி பட்டப்படிப்பினை சுவீடன் பல்கலைக்கழகத்தில் கற்று பட்டத்தினை பெற்றவர் இவர் சிந்தாமணி-தினபதி பத்திரிகையாளர், இவர் மறைந்த தலைவர் எம்.எச். எம். அஷ்ரப் அமைச்சராக இருந்த காலத்தில் கப்பல் கூட்டுத்தாபணத்தின் நிறைவேற்று பணிப்பாளர் , கிழக்கு பல்கலைக்கழகம் ,மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் செனட் உறுப்பிணர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவராக வும் தேசிய ஜக்கிய முன்னணியின் பிரதித் தலைவராகவும் பணியாற்றியவர் அத்துடன் இலங்கை ஒலிபரப்பு மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனங்கள் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றியவர், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அமைச்சராக இருந்த காலத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் உள்ள கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ சபையின் தலைவராகவும் 6 வருடங்கள் பணியாற்றியவர் தற்பொழுது இவர் கடந்த 12 வருடங்களாக லண்டனில் வசித்து வருகின்றார். இவரது ஓர் மகளும் ,மகனும் வைத்தியத்துறை பயிலுகின்றனர் மற்றவர் சட்டத்தரணியுமான உள்ளனர்.என்பது குறிப்பிடத்தக்கது.






எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் தலைமையாக செயல்படும் அமெரிக்கா அரசின் நடவடிக்கைகள் மீண்டும், மீண்டும் இரத்தம் குடித்துக் கொண்டே இருப்பதாக நம்பப்படுகிறது. ஏனெனில் பல்லாயிரக்கணக்கான மக்களை படுகொலை செய்த பிறகும் கூட இஸ்ரேலிய அரசும் அதன் தீவிர எண்ணம் கொண்ட தலைமையிலான குழுவும் அது போன்ற தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் கண்டு சர்வதேச மனசாட்சி உள்ள மக்கள் அனைவரும் உள்ளம் குமுறுகின்றனர் என்பதை நாம் புரிந்து தாக்குதலை முறியடிக்கவே நாங்கள் யூத ராணுவ நிலைகள் மீது தாக்குதலை வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டோம் என்று ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த நிலையில் தங்கள் தலைவர் பாஆத் சுக்ர் மரணத்திற்கு பலி வாங்கவே முதல் தாக்குதலாக இந்த தாக்குதலை தொடங்கி வைத்துள்ளோம். இனி இது போன்ற தொடர் தாக்குதல்களை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தெரிவித்துள்ளது . காஸாவில் ஹமாஸ் உடன் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேல், லெபனானை தளமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு மாறி, மாறி தாக்குதலை நடத்தி வந்த போதும் இந்த தாக்குதல் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் வரலாற்றில் ஒரு பகுதியாக இருக்கும் என நவீன இஸ்ரேலின் நிறுவனர்கள் 1947-ஆம் ஆண்டு ஒப்புக்கொண்டனர். எனினும், அரேபிய நாடுகள் தன்னைத் தாக்கிய பிறகு, இந்தத் திட்டத்தை இஸ்ரேல் கைவிட்டது.

இஸ்ரேல் மற்றும் பாலத்தீனம், இரு தரப்பும் மேற்குக் கரையின் மீதான தங்களின் உரிமையை கோருகின்றனர். பல ஆண்டுகளாக அவ்வபோது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தாலும், இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

மேற்கு கரையில் உள்ள அகதிகள் முகாம்களில் புதிய தீவிரவாத குழுக்களை வளர்க்க இரான் உதவுவதாக இஸ்ரேல் குற்றம் சொல்கிறது.

மேற்குக் கரையில் பல அகதிகள் முகாம்கள் உள்ளன. அவற்றில் பல ஆயிரக்கணக்கான பாலத்தீனர்கள் முடியாமல் உடனடியாக நிர்வாகத்தை ஒப்படைத்து விட்டு வெளியேறி விட்ட வரலாறு தெளிவான சான்றுகளாக விளங்குகின்றது .

பொதுவாக அமெரிக்கா அரசு பேசும் சமாதானம் போன்று உலக வரலாற்றில் வேறெங்கும் இதுவரையில் நடந்ததாக நம்மால் அறிந்து கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது. அமெரிக்க இல்லாமல் இஸ்ரேல் எந்தவொரு நாடு இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அமெரிக்க அரசு சார்பில் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா வெளிவிவகார அமைச்சர்களான ஆண்டனி பிளிங்டன் மற்றும் ராணுவ துறை சார்ந்த லாயிட் ஆஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டு பேச்சுவார்த்தை நடத்தும் நிலையில் மற்றொரு பக்கம் அமெரிக்கா திருட்டு தானமாக காசாவில் பொது மக்களை அரேபியா செல்லும் நோக்கில் இருக்கும் போது தான் இஸ்ரேல் இந்த தாக்குதலை மேற்கு கரை நோக்கி நடத்தி வர உள்ளே நுழைந்து இருப்பது தெரிய வந்துள்ளது.

இதற்கிடையில் இஸ்ரேலிய ராணுவத்திற்கு மிகுந்த இழப்பை ஏற்படுத்தும் வகையில் ஈரான் நாட்டின் மற்றொரு ராணுவமாக செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு வெற்றிகரமான தாக்குதலை இஸ்ரேல் நாட்டை நோக்கி முன்னெடுத்துச் செல்கிறது . அதேநேரத்தில் ஏமன் நாட்டில் இருந்து ஹீத்திக்கள் ஏவுகணை தாக்குதலை மத்திய தரைக்கடல் பகுதியை நோக்கி உக்கிரமான முறையில் நடத்தி வருகின்றனர். கடந்த வாரம் கிரீஸ் கப்பலில் கொண்டு வரப்பட்ட 1,50000 டன் அளவில் ஆன கச்சா எண்ணெய் கப்பல் மீது ஹீத்திக்கள் தாக்குதல் நடத்தி கப்பல் பற்றி எரிய



# இஸ்ரேலிய போர் அடுத்த கட்டத்திற்கு தாவிய நிலையில் மிகப்பெரிய சிக்கலில் சர்வதேச சமூகம்!

கொள்ள கூடியதாக இருக்கிறது. அமெரிக்கா தேர்தலில் பிரச்சார மேடைகளில் கூட பாலஸ்தீனத்தில் பொது மக்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து கடுமையான எதிர் குரல்கள் வலுவான நிலையில் எழுந்து வருவதைக் காண முடிகிறது.

இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் மற்றும் ராக்கெட்டுகளை ஏவுவதற்கான நகர்வுகளைக் கண்டறிந்த நிலையில், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாஹ் இலக்குகள் மீது தங்கள் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இதற்கு பதிலடியாக, ஹிஸ்புல்லாஹா இஸ்ரேல் பிராந்தியத்தில் தாக்குதல் நிகழ்த்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் மூலம் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் சர்வதேச நாடுகள் அளவில் மிகப் பெரிய அளவிலான குழப்பம் நிலவுகிறது.

இதனிடையே, தாங்கள் ஏற்கெனவே 320-க்கும் மேற்பட்ட கத்யுஷா ரக ராக்கெட்டுகளை ஏவியுள்ளதாகவும், அவை 11 இஸ்ரேலிய ராணுவ தளங்கள் மற்றும் ராணுவ குடியிருப்புகளைத் தாக்கி மிகுந்த சேதத்தை ஏற்படுத்தி உள்ளதாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் மூலம் இஸ்ரேலிய ராணுவம் நிலை குலைந்து போய் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் வழக்கம் போல யூத அரசு இதனை மறுத்து வழக்கமான சால்ஜாப்பு அறிக்கை மூலம் சமாளித்து வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.

களத்தில் உள்ள உண்மைக்கு மாறான தகவல்களை இஸ்ரேல் தெரிவிப்பதாக ஹிஸ்புல்லாஹ் கூறியுள்ளது.

இஸ்ரேல் மீதான தங்களின் தாக்குதல், “சியோனிச ஏதேத்சகார ஒரு மைல் கல் என்பதே உண்மையாகும். டெல் அவிவ் உட்பட 11 இராணுவ நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஹிஸ்புல்லாஹ் நடத்திய துல்லியமான தாக்குதல் காரணமாக சில மணி நேரத்தில் இஸ்ரேலிய அரசு இந்திய மதிப்பில் 1000 கோடி ரூபாய் அளவுக்கு மிகப் பெரிய அளவில் பொருளாதார இழப்பை சந்தித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதனைத் முழுமையாக மறைக்கும் நோக்கில் இஸ்ரேலிய அரச தலைமை உடனடியாக ஊடகங்களுக்கான பல்வேறு தடைகளை கொண்டு வந்து தங்களின் சர்வாதிகார தன்மையை நிலை நாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இஸ்ரேலிய ராணுவம் நடத்திய தாக்குதல்களில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் 10 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை“ என்று கூறி, நான்கு நகரங்களுக்கு தனது படைகளை அனுப்பியுள்ளது இஸ்ரேல்.

மேற்கு கரையில் கடந்த 20 ஆண்டுகளில் இஸ்ரேல் நடத்தும் மிகப்பெரிய தாக்குதல் இது என கருதப்படுகிறது.

பாலஸ்தீன மத்திய தரவுகள் அமைப்பின் தகவல்கள் படி சுமார் 32 லட்சம் மக்கள் இந்தப் பகுதியில் வசிக்கின்றனர். இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலானவர்கள் பாலஸ்தீனர்கள். எனினும் பல யூதர்களும் இங்கு உள்ளனர். சர்வதேச சட்டத்துக்கு விரோதமான குடியிருப்புகளில் அவர்கள் வசிக்கின்றனர்.

மேற்குக் கரையின் பெரும்பாலான பகுதிகள், எதிர்காலப் பாலத்தீன நாட்டின் வசிக்கின்றனர். அவர்கள் இன்று இஸ்ரேலாக இருக்கும் பகுதியிலிருந்த தங்கள் வீடுகளிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டவர்கள்.

இந்த முகாம்களில், குறிப்பாக அங்குள்ள இளைஞர்களிடம், வறுமையும் வேலையின்மையும், அதிகமாக உள்ளன.

இந்த முகாம்கள், குறிப்பாக ஜெனின் முகாம், பல புதிய பாலத்தீனத் தீவிரவாதக் குழுக்களுக்கான இடமாக மாறியுள்ளது என்று பிபிசி-யின் செய்தியாளர் பால் ஆடம்ஸ் கூறுகிறார். அவர்களைக் குறிவைத்தே சமீபத்தியத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன என்கிறார்.

இரான் மேற்குக் கரையில் புதிய ஆயுதமேந்தியக் குழுக்களை உருவாக்க உதவி வருவதாக இஸ்ரேல் கருதுகிறது என்றும், நிதி மற்றும் ஆயுதங்களை வழங்கி இஸ்ரேலை எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் கட்டுப்படுத்தி வைக்க இரான் முயல்கிறது என்றும் இஸ்ரேல் கருதுவதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் வரம்பற்ற யூத ராணுவம் தாக்குதலை முழுமையாக சமாளிக்க ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் ஹாலித் மாஷல் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு ஒட்டு மொத்த யூதர்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஹாலித் மாஷல் திட்டத்தின் அடிப்படையில் அடுத்த கட்டமாக டெல் அவிவ் நகரில் முழுமையாக மனித வெடிகுண்டுகள் மூலம் தாக்குதலை முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஆட்களை தேர்வு செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது . இந்த திட்டத்தின் அடிப்படையில் தான் ஈராக்கில் அமெரிக்க ராணுவம் தாக்குதலை சமாளிக்க படுகொலை செய்யும் நோக்கில் பல நூற்றுக்கணக்கான டன்கள் அளவிலான ஆயுதங்களை அனுப்பி வைத்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் அமெரிக்கா தான் இந்த போரை நடத்தி அந்த பிராந்தியத்தில் தனது வல்லாதிக்க சக்தியை நிலை நிறுத்த முயன்று வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது. இஸ்ரேலிய ராணுவத்தால் நடத்தப்படும் மனித இன படுகொலைக்கு மூல காரணமாக அமெரிக்கா அரசு தான் செயல்பட்டு வருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. அமெரிக்காவை பொருத்தவரை மத்திய கிழக்கில் தனது சர்வாதிகார தன்மையை நிலை நிறுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இதற்கு அவர்களால் உருவாக்கப்பட்ட கள்ள குழந்தை தான் யூத தேசம் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிந்து கொண்ட உண்மையாகும். இத்தனை ஆயிரக்கணக்கான பொதுமக்களை படுகொலை செய்து வருகின்ற நிலையில் கூட ஒரு சிறிய நாடான இஸ்ரேலிய அரசை தடுத்து நிறுத்த சர்வதேச நாடுகளால் இயலாமல் போனது என்பது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலையில் காசாவில் படுகொலைகளை நிகழ்த்தி நிலையில் யூத ராணுவம் மேற்கு கரையில் துவம்சம் செய்யும் நோக்கில் உள்ளே நுழைந்து இருப்பது பல்வேறு சதி திட்டங்கள் அடிப்படையில் தான் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. சில நாட்களுக்கு முன் மேற்கு கரை அதிபர் மஹ்மூத் அப்பால் துருக்கி சென்று அதிபர் எர்டோகனை சந்தித்து பேசினார். தற்போதைய நிலையில் அவர் சவுதி ஆரம்பித்தது. இந்த நிலையில் சர்வதேச நாடுகள் ஈரான் நாட்டை அணுகி ஹீத்திக்கள் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் வைத்த நிலையில் கடல் மாசுபாடு ஆக இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் தற்காலிகமாக ஹீத்திக்கள் தாக்குதலை நிறுத்தி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதே போல் ஈராக் மற்றும் சிரியாவில் இருந்து செயல்படும் இஸ்லாமிய கூட்டு படைகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கா, இஸ்ரேலிய கூட்டு தயாரிப்பான பவர் ஸ்டேஷன் முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் காசாவில் ஹமாஸ் இயக்கத்தின் ராணுவ பிரிவான அல் ஹஸம் படை பிரிவின் தாக்குதலால் நூற்றுக்கணக்கான இஸ்ரேலிய படை வீரர்கள் கொல்லப்பட்டு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன . இந்த தாக்குதலின் காரணமாக நூற்றுக்கணக்கான இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் கொல்லபட்ட நிலையில் இஸ்ரேலிய ராணுவ ஹெலிகாப்டர் மூலம் உடல்கள் எடுத்து செல்லப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. இது போன்ற பதுங்கு குழி தாக்குதலை சந்தித்து பழக்கப்படாத யூத ராணுவம் சிக்கி திணறி வருவதாகவும் பலர் மன அழுத்தம் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும் நிலை காணப்படுவதாகவும் வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியாகியுள்ளது. இது வரையில் கடந்த 11 மாதங்களில் 18,000 க்கு மேற்பட்ட இஸ்ரேலிய

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

## கத்தார்...
(6ம் பக்கத் தொடர்ச்சி)

ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு விட்டதாகவும், பலர் பலத்த காயமடைந்து நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது.ஆனால் இஸ்ரேலிய ராணுவம் வெறும் 700 பேர் மட்டுமே இறந்ததாக பொய்யான தகவல்களை சர்வதேசத்தின் முன் வைத்து இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

இதற்கிடையில் இஸ்ரேலிய ராணுவத்தின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் பிரிக் பேசும் போது இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் ஒரு வருடத்தில் இஸ்ரேல் நிலை மிகுந்த மோசமான சூழ்நிலை உருவாகும் என்று கூறி உள்ளார். மற்றொரு முன்னாள் ராணுவ தலைவர் கூறும் போது இஸ்ரேல் அரசு இந்த போரில் முழுமையாக தோல்வியை தழுவியது என்பது தான் உண்மை என்று கூறி உள்ளார் . மேலும் அவர் தனது பேட்டியில் இத்தனை பெரிய விமான படைகள் மற்றும் தொழில்நுட்ப கருவிகளை கொண்ட இஸ்ரேலிய ராணுவம் ஒரு சிறிய படையை அல்லது குழுக்களை வெற்றி கொள்ள முடியாத நிலை கடந்த 11 காணப்படுகின்றன என்று காட்டமாக கூறி உள்ளது தற்போது மிகுந்த சர்ச்சைக்குரிய கருத்தாக மாறி வருகிறது. ஆனால் பெஞ்சமின் நிதான்யாகு எந்தவொரு ஆலோசனைகளையும் கேட்பதாக தெரியவில்லை. ஆனால் முடிவு மிகவும் மோசமான ஒரு சூழ்நிலையை நோக்கி செல்வதை அவரால் இன்னும் உணர்ந்து கொள்ள இயலாத ஒன்றாக இருக்கிறது என்பதை தான் நம்மால் உணர முடிகிறது.

இதற்கிடையில் இஸ்ரேலிய நாட்டின் பொருளாதாரம் அகல பாதாளத்தில் வீழ்ச்சி அடைந்து வருவதாக ஜளசயநட வுைஅநள (நாளிதழ்) செய்தி வெளியாகியுள்ளது. அந்த வகையில் கடந்த 2023 ம் ஆண்டு கடைசி நிதி ஆண்டில் இஸ்ரேல் நாட்டின் ஜி டி பி 20.4 ஆக இருந்த நிலையில் 2024 ம் ஆண்டு இரண்டாவது நிதி ஆண்டில் 17.3 ஆக குறைந்து தற்போது 2024 ம் ஆண்டு ஜீலை மாதம் 1.2 சதவீதம் என்ற அடிப்படையில் மிகப் பெரிய அளவில் ஆன வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது . அதேநேரத்தில் 60,000 க்கு மேற்பட்ட பொது துறை மற்றும் தொழில் துறை நிறுவனங்கள் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இஸ்ரேலிய நாட்டின் வட பகுதியில் வாழ்ந்த மக்கள் உயிருக்கு பயந்து 3,00000 பேர் வரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் புலம் பெயர்ந்து வாழும் நிலையில் பலர் அகதிகள் முகாம்கள் மற்றும் ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பலர் தங்கள் குழந்தைகளின் கல்வி குறித்து மிகுந்த கவலை அடைந்துள்ளனர். அதே சமயம் இஸ்ரேலிய நாட்டின் வசதி நிறைந்த மேல்தட்டு குடும்பங்கள் பலர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்வேறு நாடுகளுக்கும் செல்லும் சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இது வரையில் இரண்டு இலட்சம் பேர் குடிபெயர்ந்து உள்ளதாக கூறப்படுகிறது. இதே போல் டெல் அவிவ் நகரில் உள்ள பென் கூரியன் ஏர் ஃபோர்ட் இழுத்து மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனையெல்லாம் குறிப்பிட்டு பேசிய இஸ்ரேலிய நாட்டின் பிரதான எதிர் கட்சி தலைவர் யாயிர் லாபிட் இது போன்ற மோசமான நிலைக்கு தேசத்தை தள்ளி பொது மக்களை காப்பாற்ற தவறிய முழுப் பொறுப்பு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு வை தான் சாரும் என்று குற்றம் சாட்டியுள்ளது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது . அதேநேரத்தில் அக்டோபர் 7 தாக்குதலை ஏன் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசு அறிந்து கொண்டு பொது மக்களை காக்கவில்லை என்று கேள்வியை முன் வைத்துள்ளார். இதற்கிடையில் நாடு முழுவதும் பொது மக்கள் உடனடியாக போரை நிறுத்தி சமாதான உடன்படிக்கை மேற்கொண்டு நாட்டை இயல்பான சூழலுக்கு உட்படுத்த வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் தீவிர தீவிர யூத சியோனிசம் சார்ந்த அரசியல் வாதிகளும் இது குறித்து கொஞ்சமேனும் கவலை இருப்பதாக தெரியவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

இத்தனை நெருடல்களுக்கு மத்தியில் இஸ்ரேலிய அரசின் தீவிர சியோனிச வலது சாரி தலைவர் பென் கேவிர் அல் அக்ஸா மசூதி சுற்று சுவரின் உட்புறமாக யூதர்கள் வழிபாடு நடத்தும் வகையில் யூத கோயில் ஸ்னிகிஸ் கட்டப்பட வேண்டும் என்று கூறி சர்வதேச அளவில் பதட்டத்தை உருவாகக் உள்ளார். இந்த பென் கேவிர் தான் தற்போதைய நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசிற்கு முழுமையாக ஆதரவை வெளிப்படையாக கொடுத்து வரும் நிலையில் இந்த அரசு தப்பி பிழைத்து வருகிறது. குறிப்பாக சொல்லப்போனால் காசாவில் இது போன்ற வலிமையான போரை நடத்தி பொதுமக்களை படுகொலை செய்ய தூண்டுதலாக இருந்து வருவதே இந்த பென் கேவிர் என்பது தான் அனைவரும் அறிந்த உண்மை என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை..

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய அரசு காசாவை தாண்டி மேற்கு கரை நோக்கி பயணிக்க ஆரம்பித்து இருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரத்தில் இஸ்ரேலிய யூத சியோனிசம் சார்ந்த கொள்கையை முற்றிலுமாக முறியடித்து வெற்றி கொள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஈரான் அரசின் தலைமை வெளிப்படையாக வேண்டு கோள் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது வரையில் இந்த குரலை கேட்காமல் இருந்த சவூதி அரேபியா தற்போது வெளிபடையாகவே யூத சியோனிசம் அரசின் செயற்பாடுகளை விமர்சனம் செய்து இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக ஈரான் நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சர், சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சு உடன் தொலைபேசி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதால் அமெரிக்கா மிகுந்த பதட்டத்தில் இருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அதே நேரத்தில் இஸ்லாமிய அடிப்படையிலான சித்தாந்த தத்துவங்களை தன்னகத்தே உள்வாங்கிய பல்வேறு போராளி குழுக்கள் தற்போது ஒருங்கிணைந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவ நிலைகளுக்கு எதிராக போராடி வருவதும் அவர்களின் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் இஸ்ரேலிய ராணுவம் திணறி வருகின்றனர் என்பதை ஒப்புக் கொள்ள இஸ்ரேல் அரசு மறுத்து வருகிறது. ஆனாலும் எத்தனை காலம் உண்மையை இவர்களால் மறுக்க முடியும் என்பது யாருக்கும் புரியவில்லை.

இஸ்ரேலிய ஜனுகு ராணுவம் தொடர்ந்து வலிமை குறைந்த நிலையில் மனச்சோர்வு நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளார்கள் என்பதை கவனித்து தான் ஈரான் அரச தலைமை நேரடியாக போரில் ஈடுபடாமல் தங்களது துணை போராளிகள் மூலம் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருவதைக் காண முடிகிறது. இருந்த போதிலும் ஈரான் நேரடியாக போரில் ஈடுபட்டால் என்ன மாதிரியான விளைவுகள் வரும் என்பதை மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்து வருவதாக கூறப்படுகிறது. அதேநேரத்தில் வலிமை வாய்ந்த ஹிஸ்புல்லாஹ்க்களிடம் இந்த பொறுப்பை ஈரான் ஒப்படைத்த நிலையில் வடக்கு இஸ்ரேலிய பகுதியில் இருந்து யூதர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது என்பதை நாம் அறிவோம். இதன் மூலம் இஸ்ரேலிய எதிர் கட்சிகள் வட பகுதி முழுமையாக இஸ்ரேல் நாட்டின் கட்டுபாட்டில் இல்லை என்று கூறி உள்ளார்கள்.

தற்போதைய நிலையில் கசா மற்றும் மேற்கு கரையில் ஹமாஸ் இயக்கம் வலிமையான தாக்குதலை நடத்தி பல நூற்றுக்கணக்கான ராணுவ வீரர்களை படுகொலை செய்து வருகின்றனர்.ஆனால் இதனை இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவ தலைமையும் மறுத்து வருகின்றது.

இந்த உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் உலகில் யாராலும் வெல்ல முடியாத சக்தி என்கிற யூத ராணுவம் 11 மாதங்களாக ஒரு சிறிய குழுவினருடன் போராடி வெற்றி பெற முடியாததே இதற்கு முழுமையான சாட்சியாக இருந்து வருகிறது.

இந்த போரில் ஒரு குழு மரணத்தை சுவைத்தே ஆக வேண்டும் என்கிற மனநிலையில் போராடி வருகிறது. அவர்களை எதிர்த்து களமாடும் மற்றொரு குழு அதனை கண்டு வெறுண்டு ஒடும் சூழல் தற்போது உருவாகியுள்ளது. இந்த நிலையில் இதில் யார் வெற்றி பெற போகிறார்கள் என்பதை காலம் தான் முடிவு செய்யும் என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே நாம் அனைவரும் புரிந்து கொண்டாலே போதும் என்பதே எனது கட்டுரையின் கருப்பொருளாக எடுத்து கொள்ள வேண்டும்!




# பாடசாலைகளிலும் எமது சமூகத்திலும் வாசிப்பு ஏன் பரவலாக்கப்படவில்லை?

வாசிப்பு கட்டாய கடமையாக்கப்பட்ட ஒரு சமூகத்தில் வாசிப்பின் நிலை பரிதாபமாக உள்ளது என்பது கசப்பான கவலையான ஓர் உண்மை. சமூக வெளிப்பாடு.

பாடசாலைகளில் வாசிப்பு மட்டம் போதாமையின் காரணமாக பரீட்சைகளிலே மிகப் பெரிய பின்னடைவை எமது மாணவ சமூகமும் இளம் தலைமுறையும் கண்டு வருகின்றனர். இதனால் பாடசாலைகளின் கீர்த்திகள் மட்டுமல்ல சமூகத்தின் மகிமையும் கட்டங்கட்டமாக அருகி வருகின்றது.

ஆரம்ப காலங்களில் அடிப்படைப் பாடங்களில் ஒன்றான சமய பாடத்தில் அதிகூடிய சித்தியை வாய்மொழி மூலம் சொல்லப்படுகின்றவற்றை செவிமடுத்து

வாழ்க்கை முழுக்க நடைமுறைப்படுத்தும் விடயங்களை வைத்து தனது எழுத்தாற்றலை கொண்டு விடையளித்த மாணவப் பரம்பரை இன்று இல்லை. அவர்களால் குறைந்தபட்சம் ஒரு வசனத்தை கூட உறுபமய எழுதவும் முடியாது கருத்தமைய வெளிப்படுத்தவும் முடியாது அந்த அளவுக்கு எழுத்தாற்றலிலும் பலவீனம் காணப்படுகிறது.

11 வருடம் கற்கின்ற தாய் மொழியில் கூட சிறப்பான பெறுபேற்றைக் கூட பெற முடியாத அவல நிலை. பின்பற்றுகின்ற சமய பாடத்தில் கூட தரமான ஒரு சித்தியை பெற முடியாத துர்பாக்கிய நிலை. இவை எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் எழுத்தாற்றலையும் வாசிப்பு ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளாமை தான். அதிலே நேர காலத்தை ஒதுக்காமை, வாசிப்பை மேம்படுத்திக் கொள்வதற்குரிய வழிகாட்டல்கள் கிடைக்காமல் வாசிப்பு மீதான ஆர்வம் குன்றி விடுவதற்கு இணைய பாவணையும் திறன் பேசிகளும் சமூக ஊடக பாவனைகளும் இளந்தலை முறையை பலி கொடுக்கவும் வினோதங்களுக்காகவும் என்றே தயார்படுத்தப்பட்டிருக்கின்ற நவீன செயலிகளின்யீள பாவனையும் தான் காரணம் என்றால் அது பிழையாகாது.

ஒரு காலத்தில் கற்றலில் ஆர்வம் இல்லாத மாணவர்கள் கூட பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் அதீத ஆர்வத்தோடு பங்கெடுத்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடினர். குறிப்பாக முஸ்லிம் பாடசாலைகளில் கல்வித் தளங்களில் போட்டிகளில் பொது நிகழ்வுகளில் மாணவிகள் சிறந்த ஆற்றுகையை வெளிப்படுத்தி பெரும் பெறுகளை பெற்றுத் தந்து பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்க்கையில் விளையாட்டுக்கள் மூலம் ஆண் மாணவர்கள் தேசிய மட்டம் வரை சாதனை படைத்தனர்.

ஆனால் இன்று மாணவர்களது உடல் ஆரோக்கியம் மிக மோசமாக பாதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி அணியக்கூடிய ஒரு தொடர் தலைமுறையை பாடசாலையில் அவதானிக்க முடியும். மந்த போசனை, மறதி நினைவில் வைக்க முடியாமை, கிரகிக்க முடியாமை, போன்ற எண்ணற்ற உள ரீதியான பாதிப்புகளுக்கு மாணவப் பரம்பரை உள்ளாகியுள்ளனர். இவை எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் பாடப்புத்தகங்களை விட்டும் பாடசாலையை விட்டும் கற்றலை விட்டும் அவர்கள் விலகி இருக்கின்ற மைதான். இதன் காரணமாக வாசிப்பில் ஆர்வம் குன்றி வாசிப்பை விட்டும் தொலைதூரம் விரண்டோடி விடுகின்றனர்.

சர்வதேச உலகமெங்கும் இன்று வாழ்நாள் நீடித்த கல்விக்காக வாசிப்பை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அதற்கான செயல்மர்வுகள் நடைபெறுகின்ற நிலையில் வாசிப்பை வணக்கமாக அமைத்த சமயத்தை பின்பற்றக்கூடிய மாணவர்கள் வாழ்கின்ற, கற்கின்ற பாடசாலைகளில், ஊர்களில் வாசிப்பு அருகி வருகின்றமையும் சமூக ஊடக பாவனை பெருகி வருகின்றமையும் எதிர்காலம் குறித்த இருண்ட அவதானத்தை எமக்கு தருவதாக உள்ளன.

எனவே கல்விச் சமூகம் இது குறித்து கூர்ந்து கவனம் செலுத்தி முதற்கடமையாகிய வாசிப்பை மீளவும் பாடசாலை மட்டத்திலிருந்து உருவாக்குவதற்கு மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். வழி காட்ட வேண்டும் அதற்குரிய திட்டங்களை வகுத்து செயல்படுத்த வேண்டும்.

”வாசிக்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்”

மனித படைப்புடன் தொடர்புபடுத்தி இறைவன் வாசிப்பை அறிமுகம் செய்வதன் தாற்பரியம் இதுதான்.

எமது சமூகம் அந்த வசனத்தை இன்னும்

சரிவர உணராமைக்கு

அது சரியாக

மொழிபெயர்க்கப்பட்டு அரத்தப்படுத்தப்படாமை தான் காரணம்.

அதற்கு மார்க்கம் கற்றவர்களும் பின்னாட்களில்

பாடசாலைகளில்

கற்பிப்பவர்களும்

சமூகத்தில் உள்ள கற்றவர்களும்

பெற்றோரும்

காரணம் என்பதை துணிந்து கூறலாம்.

எமது பாடசாலைகளில்

வாசிப்புக்கான

பாடங்கள் வாராந்தம் எந்தளவு ஒதுக்கப்பட்டுள்ளன?

வாரத்தில் எத்தனை நாட்கள் நூலகம் திறக்கப்பட்டுள்ளது?

நூலகத்தில் பாடசாலை மாணவர்கள் எல்லோரும் அங்கத்துவம் பெற்றுள்ளனரா?

நூலக பொறுப்பாசிரியர் வாசிப்பில் எந்தளவு ஆர்வமும் ஈடுபாடும் கொண்டுள்ளார் ?

மாணவர்களது வாசிப்பு மேம்பாட்டுக்கான

சுரனைஅநவெள களை எந்தளவு உள்வாங்கி மாணவர்களை வழிகாட்டுகின்றனர்?

பாட ஆசிரியர்கள் பாடம் சார்ந்த உசாத்துணைகள் குறித்து எந்தளவு விளக்கம் பெற்றுள்ளனர்?

மாணவர்களுக்கு வழிகாட்டுகின்றனர்???

மாணவர்களது வாசிப்பை எந்தளவு பரீட்சிக்கின்றோம்????

வழிகாட்டுகின்றோம் ???

எத்தனை எத்தனை நூலக அலுமாரிகள் இன்னும் திறக்கப்படாமல்......

வாசிக்கப்படாமல்....

புத்தம் புதியதாக அடுக்கடுக்காக வைக்கப்பட்டுள்ளன?

வாசிப்பின் அவசியம் முக்கியம் குறித்து பாடசாலைகளில்

மாணவர்களும்

ஆசிரியர்களும்

பெற்றோரும்

அறிவூட்டப்படுகின்றனர்

இப்படி தொடுப்பதற்கு ஆயிரம் கேள்விகளும்

ஆயிரம் ஓட்டைகளும் இடைவெளியும் உள்ள நிலையில்

மாணவர்களை மட்டுமே

விரல்நீட்டி

விமர்சித்து சாடுவதில்

எதுவும் ஆகப்போவதில்லை...



# குறுக்கு வழி தந்திரோபாயங்களிலிருந்து முஸ்லிம் கட்சிகள் நிதானிக்கட்டும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 20 நாட்களே இருக்கின்ற நிலையில் களத்தில் இறங்கி போட்டியிடும் ஒவ்வொரு பிரதான அரசியல் கட்சிகளினதும் ஜனாதிபதி வேட்பாளர்கள் எப்படியேனும் வெற்றிபெற்று ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற நோக்கில் தேர்தலை வெற்றிகொள்வதற்காக பலவிதமான தேர்தல் கால தந்திரோபாயங்களையும் உத்திகளையும் கையாள்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அதே நேரம் தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், தேர்தல் ஒருங்கிணைப்புக்கான கட்சி காரியாலயங்களை எவ்வாறு நடத்துவது, பிரச்சார நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது, சுவரொட்டிகளை ஒட்டுவது, கட் அவுட்களை பயன்படுத்தும் முறை, பொலிதீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை பயன்படுத்தும் ஒழுங்கு முறைகள் என்று சட்ட மற்றும் ஒழுங்குவிதிகளை அறிவித்திருக்கின்றது. அவற்றை மீறும் போது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதே நேரம் ஏற்கனவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களால் தேர்தல் சட்ட விதிகளுக்கமைவாக வழங்கப்பட்ட சொத்து மற்றும் உடமைகள் பற்றிய விபரங்களையும் தேர்தல் ஆணைக்குழு பகிரங்கமாக மக்கள் பார்வைக்காக அதன் இணையத்தளத்தில் பிரஸ்தாபித்திருக்கின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் பிரதான அரசியல் கட்சிகளில் இருந்தும் சுயேட்சை குழுக்களில் இருந்தும் போட்டியிடும் வேட்பாளர்களான ரனில் விக்கிரமசிங்கா, சஜித் பிரேமதாசா, நாமல் ராஜபக்ஷ, அநுரகுமார திசாநாயக்கா, திலிப் ஜயவீர, சரத் பொன்சேகா உள்ளிட்ட வேட்பாளர்கள் மும்முரமாக பிரச்சார பணிகளில் ஈடுபட்டு வருவதோடு அவரவர் கட்சிகளது தேர்தல் விஞ்ஞாபனங்களையும் வெளியிட்டு மக்களை கவர்ந்திழுக்கும் நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஜே.வி.பி யான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டதோடு ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜனபல வேகயவின் தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிட்டு வைக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தலைமையிலான சுயேட்சை குழுவினதும் தேர்தல் விஞ்ஞாபனம் மக்கள் கைகளுக்கு கிடைத்திருப்பதால் அவற்றில் எந்த தேர்தல் விஞ்ஞாபனம் இந்த நாட்டிற்கு பொருத்தமானது, எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பாக மக்கள் சிந்தித்து வருகின்றனர். இந்நிலையில் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பாக குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

சுயாதீன வேட்பாளர் ரனில் விக்கிரமசிங்காவும் முழுமையாக நாட்டை மீள கட்டியெழுப்புவது தொடர்பாகவே கவனம் செலுத்தி உள்ளார். சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நாடு பழைய நிலைக்கு செல்லாமல் பொருளாதார அபிவிருத்தியை நோக்கியதாக கட்டியெழுப்புவது, குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான நிவாரணம், யூரியாவின் விலையை 5000 ரூபா வரையில் குறைப்பது உட்பட பல விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. இதற்கு மேலதிகமாக சமூக ஊடகங்களை பயன்படுத்தி தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுப்பதில் பலவிதமான தேர்தல் பிரச்சார தந்திரோபாயங்கள் கையாளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அவற்றில் பல விடயங்கள் உண்மைக்கு புறம்பான தகவல்களை அடிப்படையாக வைத்து மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்பவையாக உள்ளன. போலி பிரச்சார உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன.

அதிலும் ஜே.வி.பி. யை பொறுத்த வரையில் அதிகமாக முஸ்லிம் வாக்காளர்களை கவரும் வகையில் முஸ்லிம் அரசியலையும் முஸ்லிம் சமூகம் சார்ந்த அரசியல் வாதிகளையும் இலக்கு வைத்து பிரச்சார தந்தியோபாயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக முஸ்லிம் அரசியல் கட்சிகள் இனவாத சிந்தனை உடையவை என்றும் முஸ்லிம் தலைவர்கள்தான் முஸ்லிம்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாவதற்கு காரணம் என்ற அடிப்படையில் முஸ்லிம் அரசியல்வாதிகளான ரவுப் ஹக்கீம் மற்றும் ரிசாத் பதியுத்தீன் தொடர்பாக வெறுப்புணர்வை தூண்டும் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் சமூகத்திற்காக எதையும் செய்யவில்லை என்றும் அவர்களால் இனியும் எந்தவிதமான பயனும் இல்லை என்றும் அவர்களை ஓரம் கட்டுங்கள் என்ற அடிப்படையில் வெறுப்பை ஊட்டி வருகின்றனர்.

இவ்வாறான முயற்சியின் எதிரொலியே கடந்த வாரம் அக்குரணையில் நடைபெற்ற கூட்டத்தில் ரவுப் ஹக்கீம் பேசும் போது அவரின் அரசியல் வழி நடத்தலிலும் தலைமைத்துவத்திலும் மக்கள் வெறுப்படைந்திருப்பதாக காட்டுவதற்காக இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலை ஏற்பட காரணமாக அமைந்தது ரவுப் ஹக்கீம் 2019 ஆம் ஆண்டு மே மாதம் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதல் தொடர்பாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் ஜே.வி. பி. யின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கா முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கும் எதிரான முறையில் அன்று நிகழ்த்திய உரை தொடர்பாக பகிரங்கமாக நினைவூட்டியமை ஜே.வி.பி. யின் கோபத்தை தூ ண்டி இருக்கின்றது. அதன் பதிலடியாக ஹக்கீமுக்கு எதிராக கூச்சலிடுவதற்காக கும்பல்களை ஏவி எதிர்ப்பை வெளிப்படுத்தியதாக ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் குற்றம்சாட்டி இருக்கின்றது.

இவ்வாறான எதிர்ப்பலைகள் ஹக்கீம் மற்றும் ரிசாத் பதியுத்தீன் போன்றவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு சென்று சஜித்தின் பிரச்சார மேடையில் பேசும் போது மேலும் தூண்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் முஸ்லிம் சமூகம் தங்களது இருப்பு, சமூக ஒற்றுமை மற்றும் அரசியல் பலம் தொடர்பாக மிகவும் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டி இருக்கின்றது. வடக்கில் தமிழர்களின் பேரினவாதத்தால் பலவிதமான இன்னல்களும், பழிவாங்கல்களும் நடைபெற்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கென்ற தனியான அரசியல் தலைமைத்துவம், வழிநடாத்தல் காரணமாகவே ஓரளவுக்காவது தலைநிமிர்ந்து வாழும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. முஸ்லிம் சமூகம் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழுகின்ற பிரதேசங்களில் பெரும்பான்மை அரசியல் கட்சிகளை ஆதரித்து அதன் வெற்றிக்காக பாடுபட்டாலும் தமக்கென்று தனித்துவமான அரசியல் இலக்குகள் இருப்பதை மறந்துவிடக்கூடாது. அதனால் குறுகிய அரசியல் நலன்களை இலக்கு வைத்த இத்தகைய சதிவலைகளில் மக்கள் சிக்காமல் இருக்க வேண்டும்.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் என்பது குறிப்பாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் கூடுதலாக அரசியல் செல்வாக்கு செலுத்துவதாக இருப்பதோடு கடந்த காலங்களில் கூடுதலான முஸ்லிம் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகக் காரணமாகவும் இருந்து வந்திருக்கின்றது. இவ்வாறு பாராளுமன்றம் வரும் முஸ்லிம் உறுப்பினர்கள் பிரதான கட்சியொன்றுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியில் பங்காளியாக மாறுவது, அமைச்சர் பதவிகளை பெற்று தமது தொகுதிகளுக்கு இயன்ற சேவைகளை செய்வது அரசியலின் பொதுவான போக்காக இருந்து வருகின்றது. இந்த நிலை முஸ்லிம் கட்சிகளுக்கு மாத்திரம் விதி விலக்காக இல்லை. தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளும் அப்படித்தான் காய் நகர்த்தி வருகின்றன. வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 06 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் நடைமுறையில் இருப்பது போன்றே முஸ்லிம் சமூகம் சார்ந்த கட்சிகளும் உள்ளன.

இந்நிலையில் முஸ்லிம் தரப்பை மாத்திரம் இனவாதம் என்று காட்டுவதும் முஸ்லிம் தலைவர்களை அவர்களால் பலன் இல்லை என்று தூரமாக்க முற்படுவது பேரினவாத அரசியல் உத்தியும் பிரித்தாளும் தந்திரேபாயமுமாகும். சிறிய கட்சிகள் எப்போதும் ஆட்சிக்கு வரும் பெரிய கட்சியுடன் கூட்டுச் சேர்வது இலங்கை அரசியலின் பிரதான போக்காகும். அதன் மூலமே தமது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பேரம்பேசி தம் சமூகத்தின் நலனுக்காக இயன்ற நன்மைகளை அடைய முயற்சி எடுத்து வருகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. மற்றும் பிள்ளையான், கருணா போன்றவர்களும் இவ்வாறே கட்சிகளின் பிரதி நிதிகளாக வந்து அப்போதைய கோத்தாபய ராஜபக்ஷ வுக்கு ஆதரவளித்து சலுகைகளை பெற்று தொகுதிக்கு சேவையாற்ற முனைந்து வருகின்றனர்.

அதனால் இந்த ஜே.வி.பி. முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் முஸ்லிம் தலைவர்களையும் இனவாத சாயம் பூசி முஸ்லிம் சமூகத்தில் இருந்து தூரமாக்க முற்படுவது போன்று ஏனைய சிங்கள மற்றும் தமிழ் சமூகத்தவர்கள் மத்தியிலும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் குறித்தும் வெறுப்புணர்வை தூண்டும் செயலை அரசியல் தந்திரோபாயமாக முன்னெடுத்து வருகின்றது. 2010 ஆம் ஆண்டு முதல் பொதுபல சேனா கடைபிடித்து வந்த முஸ்லிம் விரோத செயற்பாட்டின் மறு வடிவமாக முஸ்லிம் சமூகத்திற்குள்ளேயே அரசியல் ரீதியாக பிளவையும் மோதலையும் தூண்ட ஜே.வி. பி. எடுத்து வரும் முயற்சிகள் அமைகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக ஜே.வி.பி. யான அநுரகுமார திசாநாயக்காவின் கட்சியின் முக்கிய உறுப்பினரான பிமல் ரத்நாயக்காக அண்மையில் தமிழ் ஊடகமொன்றுக்கு வழங்கி உள்ள நேர்காணலில் தெரிவித்திருந்த விடயங்களை நோக்கலாம்.

அவர் முஸ்லிம் தலைவர்கள் தொடர்பாகவும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் தொடர்பாகவும் தெரிவித்துள்ள விடயங்களை இத்தகைய முஸ்லிம்களுக் குள் இருந்து முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எதிரான அரசியல் வெறுப்பை தூண்டுவதாக இருக்கின்றது. அநுரகுமார திசாநாயக்காவும் முஸ்லிம் பிரதேசங்களில் மேடைகளில் பேசும் போது அதே அணுகுமுறையை கடைபிடித்து வருகின்றார். அவரது உரைகளின் ஆழமும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகள் தொடர்பான வெறுப்பை உச்சத்திற்கு கொண்டு வருவதாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஏனெனில் ரிசாத் பதியுத்தீன் மற்றும் ரவுப் ஹக்கீம் ஆகியோர் சஜித் பிரேமதாசாவுடன் இணைந்து அவரது வெற்றிக்காக பாடுபட்டு வருவதால் அந்த ஆதரவை எப்படியாவது சிதைத்து முஸ்லிம்களை சஜித் ஆதரவில் இருந்து பிரிக்க வேண்டும் என்பது திட்டமாகும். இவ்வாறான மறைமுக திட்டத்தின் மற்றுமோர் எதிரொலிதான் கண்டி மற்றும் கிழக்கில் ஒருசில இடங்களில் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமையும் அமைகின்றது. இவ்விடயங்கள் தொடர்பாக முஸ்லிம் அரசியல் கட்சிகளும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் நிலைமைகளை புரிந்து மக்களுக்கு தெளிவுபடுத்தி இத்தகைய சதி வலையில் இருந்து முஸ்லிம்களை பாதுகாக்க நடவடிக்கையில் இறங்க வேண்டும். ஏனெனில் அரசியல் கட்சிகள் தேர்தல் காலங்களில் தமது கட்சியின் எதிர்கால திட்டம் என்ன என்று சொல்வதை விட இத்தகைய குறுக்கு வழித் தந்திரோபாயங்களை கையாண்டு வாக்கு வேட்டையாடுவதை சரியான முறையில் புரிந்து கொள்ள தவறினால் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பாரிய நெருக்கடியொன்றை சந்திக்க வேண்டி இருக்கும் என்பதை இன்னும் புரிந்துகொள்ளாத நிலை காணப்படுகின்றது.

அதே நேரம் 2024.08.28 ஆம் திகதி ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை தலைமையகத்திற்கு சென்று அதன் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடி உள்ளார். அங்கு புதிய வாக்குறுதியொன்றையும் வழங்கி உள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் ஜம்மியதுல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க் நூராமித் முஸ்லிம்களது மனதில் இருக்கும் கவலையை வெளியிட்டுள்ளார். குறிப்பாக கொவிட் தொற்று பரவிய காலத்தில் முஸ்லிம்களது சடலங்களை எரிப்பதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை தொடர்பாக முஸ்லிம்கள் தீராத கவலை கொண்டிருப்பதாகவும் அது தொடர்பாக அன்றைய ஆட்சியாளர்கள் குறித்த வெறுப்புணர்வில் இருப்பதாகவும் கவலை வெளியிட்டுள்ளார்.

அதற்கு பதிலாக ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு விசாரணை நடத்துவதற்கு ஏதுவாக ஏனைய அரசியல் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி வழங்கி உள்ளார். இந்த கலந்துரையாடலின் போது இலங்கையில் இஸ்ரேல் ஊடுருவல் பற்றியும் அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகள் மற்றும் பாலஸ்தீனம் குறித்த ரனில் விக்கிரமசிங்காவின் நிலைப்பாடு தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக ஜம்மியதுல் உலமா சபையின் பிரநிதி ஒருவர் தெரிவித்தார்.

# சூடு பிடிக்கும் அரசியல் களம்...

## மஹிந்தவை ஆட்சியில் அமர்த்த பிரசாரம் செய்தமை அநுரவுக்கு ஹலாலா?

**- கேள்வி எழுப்பும் முஜீபுர் ரஹ்மான் -**

(ஐ. ஏ. காதிர் கான்)

"ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை" கேஸில் மஹிந்த ஊழல் செய்தமை தெரிந்தும், 2005 இல் அவரோடு கூட்டு அமைக்கும் போது, அநுரவுக்கு அது ஹராம் எனத் தெரியவில்லையா ?" என, பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

தெஹிவளையில் இன்று (31) காலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

மேலும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

"இன்று, அநுர குமார முஸ்லிம்களிடம் ஹராம் ஹலால் பற்றிப் பேசுகிறார். திருடர்களுக்கு வாக்களிப்பது ஹராம் என்கிறார். திருடர்களைப் பிடிக்க வந்துள்ள அவருக்கு வாக்களிப்பது ஹலால் என்கிறார். "ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை" கேஸ ில் மஹிந்த ஊழல் செய்தமை தெரிந்தும், 2005 இல் அவரோடு கூட்டு அமைக்கும் போது, அநுரவுக்கு அது ஹராம் என விளங்கவில்லையா ? என நான் அவரிடம் கேட்கின்றேன்.

1995 இல் சந்திரிக்காவோடு "டீல்" வைத்த அவர், "மஹிந்த ஊழல்வாதி" எனத் தெரிந்திருந்தும் கூட, 2005 இல் அவரை வெற்றிபெறச் செய்ய பிரசாரம் செய்தார். மஹிந்தவை "துட்டு கெமுனு அரசன்" என்று கூறியவரும் இந்த அநுர குமார திஸாநாயக்க என்பதையும் நினைவு படுத்த விரும்புகின்றேன்.

அநுரவிடம் உள்ள "ஊழல் பைல்கள்" அனைத்துமே, ராஜபக்ஷ குடும்பத்தினரதும், அவரது கட்சிக்காரர்களுடையதே.



ராஜபக்ஷாக்களை ஆட்சிக்குக் கொண்டு வர, நான் கைகளில் மை பூசிக்கொள்ளவில்லை. அநுரவே அத்திருடர்களை ஆட்சிக்குக் கொண்டு வர அவரது கைகளிலேயே மை பூசிக்கொண்ட தலைவராவர்" என்று சுட்டிக் காட்டினார்.

## ஜனாதிபதி ரணில் ஒரு இனவாதியல்ல இங்கு கூடியிருக்கும் நாங்கள் இனவாதிகளல்லர்

**முஸ்லிம்களுடனான சந்திப்பில் பிரசன்ன ரணதுங்க**



(ஏ.சி பௌசுல் அலிம்)

ஜனாதிபதி ரணில் ஒரு இனவாதியல்ல. இங்கு கூடியிருக்கும் நாங்கள் இனவாதிகளல்லர். சிங்கள தமிழ், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி எல்லோரும் இலங்கையர்கள் என்ற ஒத்த சிந்தனை கொண்டவர்களாக இணைந்து செயல்பட்டால் மட்டுமே இந்த தேசத்தை வளமான பூமியாக மாற்ற முடியும். என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மினுவாங்கொடையில் இடம்பெற்ற கம்பஹா மாவட்ட முஸ்லிம்களுடனான சந்திப்பில் தெரிவித்தார்.

மினுவாங்கொடை காஞ்சனா மண்டபத்தில் நேற்று முன்தினம் 30 நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆதரவளிக்கும் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் ஜனாதிபதி ஆலோசகர் ஆசுமாரசிங்க, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, வெத்தலை மாபோல நகர சபை முன்னாள் தலைவர் ஏ.எச்.எம் நௌஷாத், முன்னாள் மினுவாங்கொடை பிரதேச சபை உறுப்பினர் மொகமட் கஃபார், மினுவாங்கொடை முஸ்லிம் வாலிப முன்னணியின் தலைவர் எம். ஆர் இன்ஷாப் மற்றும் கம்பஹா மாவட்ட பிரதேச முஸ்லிம்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கம்பஹா மாவட்ட முஸ்லிம் பிரதேச மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தை கம்பஹா மாவட்ட முஸ்லீம் கூட்டமைப்பு ஏற்படு செய்திருந்தது. வத்தளை மாபோல நகர சபை முன்னாள் தலைவர் ஏ.எச். எம் நௌஷாத் தலைமையில் நடைபெற்ற இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தொடர்ந்து பேசியதாவது.

தமிழ் மக்களோ முஸ்லிம்களோ இனவாதிகள் அல்ல சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனவாத போக்குடைய சிலரின் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள இனவாத போக்கக்கூடிய சிலரும் முஸ்லிம்கள் மத்தியில் உள்ள இனவாத போக்கு கொண்ட சிலரும் செய்யும் இனவாத அரசியலால் நாட்டுக்கு பெரும் தீங்கு ஏற்பட்ட காலம் ஒன்று இருந்தது இனியும் இதை தொடர இடம் அளிக்க முடியாது.

இனவாதம் என்பது யாரிடம் இருந்தாலும் அவை அவற்றை நாங்கள் புறக்கணிக்க வேண்டும். நான் ஒரு சிங்கள பௌத்தன் ஆனால் நான் திருமணம் முடித்து இருப்பது ஒரு தமிழ் பெண். எங்களுக்கிடையில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. நான் நெருங்கி பழகுபவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த மாவட்டத்தின் முஸ்லிம் மக்கள் எனது சகோதரர்கள்.

அதேபோன்று சிங்கள மக்களில் முஸ்லிம்களை வெறுப்பவர்களோ தமிழர்களை வெறுப்பவர்களோ ஒரு சிலர் இருக்கலாம் அதற்காக சிங்கள மக்கள் எல்லோரும் இனவாதிகள் என்று கூற முடியாது. அதே போன்று தமிழ் முஸ்லிம் சமூகத்திலும் ஒரு சில இனவாத போக்குடையவர்கள் மக்கள் மத்தியில் இனவாத நற்செய்தி புகுத்தியுள்ளார்கள். அந்த மக்கள் இனவாதத்தை ஒருபோதும் ஆதரிக்கவில்லை ஆதரிக்கப் போவதுமில்லை. எமக்குத் தேவை இந்த நாடு வலமாக வாழ வேண்டும் என்பது. ஒரு இன்றும் கூட நான் மொட்டுகட்சியிலேயே இருக்கின்றேன்.

இந்த மண்டபத்தில் கூடியிருக்கும் இந்த மேடையில் இருக்கும் எங்களில் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அது ஒன்றே எங்களுக்கு இடையில் ஒரு ஒற்றுமையை கட்டி எழுப்புவதற்கான சிறந்த மார்க்கம் ஆகும். ஆரம்பத்தில் என்னைப் போன்று ரணில் விக்ரமசிங்கவை எதிர்த்தவர் எவரும் இருக்க முடியாது. ஆனால் இந்த நாட்டை சரியான திசையில் விட்டு செல்லக்கூடிய ஒரே தலைவர் ரனில் விக்ரமசிங்க மட்டுமே என்பதை இன்று நாம் எதார்த்தமாக புரிந்து கொண்டுள்ளோம்.

கடந்த இரண்டரை வருடங்களில் வீழ்ச்சி கண்டிருந்த நாட்டை மீளக் கட்டி எழுப்புவதில் அவர் வெற்றி கண்டுள்ளார். நாம் அந்த இருண்ட யுகத்துக்கு போக முடியாது – என்றார்.

## அரச பல்கலைக்கழகங்களில் "பகிடிவதை" கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் ஜே.வி.பி.



**- சம்பிக்க ரணவக்க -**

ஜே.வி.பியின் கொள்கைகளால் சாதாரண மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களில் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் போது மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் தமது பிள்ளைகளை தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதாக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விமர்சித்துள்ளார்.

செப்டெம்பர் 1ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய ரணவக்க, ஜே.வி.பி அரச பல்கலைக்கழகங்களில் "ராகிங்" பகிடிவதை கலாச்சாரத்தை ஊக்குவிப்பதாக குற்றம் சாட்டினார், இது பெற்றோர்களிடையே பரவலான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலைமை பல குடும்பங்களை தனியார் பல்கலைக்கழகங்களை நோக்கித் திரும்பும் நிலைக்குத் தள்ளப்பட்டது என்றும், ஜே.வி.பி. தலைவர்கள் தங்கள் பிள்ளைகளுக்காகத் தேர்ந்தெடுக்கும் ஒரு தெரிவு, சாதாரண குடிமக்களின் பிள்ளைகள் பொதுப் பல்கலைக்கழகங்களில் வன்முறை மற்றும் அமைதியின்மைக்கு உள்ளாகும் நிலைக்குத் தள்ளப்பட்டதாக அவர் வாதிட்டார்.

## சஜித் தொடர்பாக சிறுபிள்ளைத்தனமான விமர்சனம் செய்யும் அனுர குமார

**- இம்ரான் எம்.பி சாடல் -**

(மூதூர்.பறூஸ்)

முஸ்லிம்களை தொடர்புபடுத்தி சஜித் தொடர்பாக அனுர குமார செய்யும் விமர்சனம் சிறுபிள்ளைத்தனமானது என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

மூதூரில் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அண்மையில் முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் அனுர குமார சஜித் பிரேமதாச தொடர்பாக சிறு பிள்ளைத்தனமான விமர்சனங்களை முன்வைத்தார்.

திகன ,மினுவான்கொடை கலவரங்களின் போது சஜித் பிரேமதாச என்ன செய்தார் என கேட்டிருந்தார். ஆனால் அப்போது ஜனாஸா எரிப்பின் போது சஜித் என்ன செய்தார் என அவர் கேட்கவில்லை.அவரால் அவரால் கேட்கவும் முடியாது.

அனுர குமார அவர்களே அப்போது சஜித் என்ன செய்தார் என நான் இப்போது கூறுகிறேன் அதுபோன்று நீங்கள் அப்போது என்ன செய்துகொண்டிருந்தீர்கள் என கூறுங்கள். அந்த வேளையில் சஜித் நாட்டின் ஜனாதிபதியோ ,பிரதமரோ எதிர்கட்சி தலைவரோ அல்லது உங்களை போன்று ஒரு கட்சியின் தலைவரோ அல்ல. அவர் வீடமைப்பு அமைச்சர் மட்டுமே.

அந்த கலவரங்களில் பாதிக்கப்பட்ட மினுவான்கொடை ,குருநாகல் பிரதேச 21 பள்ளிவாயல்களின் புனர்நிர்மாணத்துக்கு சஜித் பிரேமதாச அவர்களே நிதி உதவி செய்திருந்தார். அந்த நிகழ்வுகளில் சஜித் பிரேமதாசவுடன் நானும் முஜிபுர் ரஹ்மானும் கலந்துகொண்டிருந்தோம். அதன்பின் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இது தொடர்பாக நான் ,முஜிபுர் ரஹ்மான் மரைக்கார் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களே குரல் எழுப்பியிருந்தோம்.

தெற்காசியாவின் செல்வந்த காட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அனுர குமார கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு ரூபா வழங்கி இருப்பாரா? ஜனாஸா எரிப்பின் போது முழு முஸ்லிம் சமூகமும் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி போராடியது எம்முடன் தமிழ் ,சிங்கள சகோதரர்கள் இணைந்து போராடினார்கள். அப்போது எங்கே சென்றார் இந்த அனுர



குமார?ஆனால் முஸ்லிம்களோடு அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒன்றாக இருந்தவர் சஜித் பிரேமதாச.

யாரையும் விமர்சனம் செய்யலாம் ஆனால் அதில் சிறிதளவாவது உண்மை இருக்க வேண்டும்.விமர்சனம் செய்ய முன் உங்களையும் சுய விமர்சனம் செய்துவிட்டு விமர்சிக்க வேண்டும்.ஆகவே முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து பொய்களை கூறி முஸ்லிம் இளைஞர்களை தூண்டி விடுவதை அனுர குமார நிறுத்த வேண்டும்.

விமல் வீரவம்ச மக்கள் விடுதலை முன்னணி ஊடாக அரசியலுக்கு வந்த அந்த கட்சி கொள்கையை உடைய ஒருவர். அவ்வாறான கொள்கை உடையவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் எவ்வாறு செயற்படுவார்கள் என்பதற்கு விமல் வீரவம்சவே சிறந்த உதாரணம் என தெரிவித்தார்.

## இலங்கையில் பலவீனமான அரசாங்கம் அமைக்க பல பக்கமும் முயற்சி

**ராஜித எம்.பி. தெரிவிப்பு**

இலங்கையில் பலவீனமான அரசாங்கம் அமைய வேண்டும் என்று பிராந்திய நாடுகள் உட்பட சில பலம் வாய்ந்த நாடுகள் விரும்புவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறானதொரு கருத்தை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்டார்.

மேலும், வாக்களிப்பதற்காக வெளிநாட்டு தொழிலாளர்கள் இலங்கைக்கு வருவதைத் தடுக்கும் நோக்கில் ராஜித சேனாரத்ன யூடியூப் வலைத்தளத்தில் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின்



நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று சனிக்கிழமை முறைப்பாடளித்திருந்தார்.

இந்நிலையில் இலங்கையில் பலவீனமான அரசாங்கம் அமைய வேண்டும் என்று பிராந்திய நாடுகள் உட்பட சில பலம் வாய்ந்த நாடுகள் விரும்புவதாகவும் அதன் மூலம் அவர்கள் பயனடைய முயற்சிப்பதாகவும் அவர் புதிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

# சூடு பிடிக்கும் அரசியல் களம்...

## அக்குறணை வெள்ளப்பெருக்கு விவகாரம்:

# முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூட்டத்தில் விளக்கம்



அக்குறணை வெள்ள விவகாரம் தொடர்பில் தன்னிடம் சகல ஆவணங்களும் உள்ளதாகவும், அவற்றைத் தொகுத்து பிரசுரமாக வெளியிடப்போவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அக்குறணையில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் விளக்கமளிக்கையில்,

நிறைய சம்பவங்கள் இந்த அக்குறணையில் இடம்பெற்றுள்ளன. அரசியலில் அவையெல்லாம் சகஜம்.

அட்டாளைச்சேனையிலும் சம்மாந்துறையிலும், பொத்துவிலிலும், நடைபெற்ற சஜித் பிரேமதாசவின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் என்றும் நினைத்திராத சனத்திரள் காணப்பட்டது. அவற்றில் கலந்து கொண்டுவிட்டு,திரும்பும் வழியில் இங்கு வந்துள்ளேன். அங்கு ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றுக் கொடுப்போம்.

அக்குறணைப் பிரதேசத்தில்வேண்டுமென்றே மக்கள் மத்தியில் என்னைப்பற்றியும் சக எம்.பி ஹலீமைப் பற்றியும் பிங்கா ஓயா பிரச்சினையில் நாங்கள் ஒன்றுமே செய்யல்ல என்று பொய் சொல்லுகின்றார்கள். இதோ, நாங்கள் என்ன செய்துள்ளோம் என்பதை பாருங்கள். என்னிடம் பைல் உள்ளது. இவ்வளவு காலமும் என்ன செய்ததோமென்பது பற்றி இதில் முழுவிபரங்களும் உள்ளன.

ஓவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்ன செய்தோம். அதுமட்டுமல்ல பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டது மட்டுமல்ல.நாங்கள் இருவரும் அமைச்சரவையில் உள்ளபோது இது சம்பந்தமாக அமைச்சரவைப் பத்திரம் தயாரித்து, அமைச்சரவையில் சமர்ப்பித்து, அமைச்சரவை செயலணியை நியமித்து சகல திணைக்களங்களுக்கும் அதாவதுமகாவலி அதிகார சபை,துறைமுக அதிகார சபை,நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபை,அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை,நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய சபைகளின் அதிகாரிகளை பாராளுமன்றத்துக்கு வரவழைத்து மூன்று முறை கலந்துரையாடினோம். இதன்போது வர்த்தக சங்கம் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் ஆகியோரையும் அழைத்து பாராளுமன்ற கட்டடத்தில் கூட்டம் நடாத்தினோம். நாங்கள் எடுத்த முடிவுகளின்படி அறிக்கை தயாரிக்கப்படவேண்டும். அதே சந்தர்ப்பத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது. இதன்பின்னர் எங்களது அரசாங்கம் கலைக்கப்பட்டது. பின்னர் புதிய அரசாங்கம் வந்த பின்பு நாங்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்றோம்.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் இரண்டு, மூன்று தடவைகள் உரையாற்றியுள்ளேன். எனக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அனுப்பட்ட பதில்களுக்கான முழு ஆவணங்களும் என்னிடம் உள்ளன. அதற்கான வரைபடங்களும் என்னிடம் உள்ளன. ஆனால், அவற்றைப்பற்றி பேசப்போனால் கட்டிடங்களின் உரிமையாளர்கள் என்னுடன் வம்புக்கு வருவார்கள்.

இதற்கு விஞ்ஞான பூர்வமாக முடிவு காண வேண்டியுள்ளது. இது தொடர்பாக அக்குறணை பிரதேச சபை கூட்டத்தில் நான் பேசிய சகல விடயங்களும் இங்கு சிங்களமொழியில் உள்ளன.

ஜனாதிபதியுடன் சொன்னதும். ஜனாதிபதி தலைமையில் கூட்டமொன்று ஆயத்தமானது.அதற்கு பள்ளிவாசல் நிர்வாகிகளும்,உலமா சபையினரும் வரவில்லை. ஏனையோர் பகிஷ்கரிப்பதாக முடிவெடுத்திருந்தார்கள்.மத்திய பிராந்திய நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை காணிமீள் நிரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அதிகாரிகள் தான் இந்தப் பிரச்சினைக்கு சிறந்த முடிவை வழங்கக் கூடியவர்கள்.நான் ஜனாதிபதியோடு பேசி முழுமையான சாத்தியக்கூறு அறிக்கைக்கு ஏற்பாடு செய்தேன்.

மைத்திரியின் ஆட்சிக் காலத்தில் 100நாள் வேலைத்திட்டத்தின் கீழ் 60 மில்லியன் ரூபா திட்டத்தின் கீழ் பிங்கா ஓயாவை அம்பதென்னவரை தோண்டி ,ஆழமாக்கினோம். ஆனால் மீண்டும் வெள்ளம் ஏற்படும்போது பழைய நிலை தான் என்றும் இது நிரந்தர தீர்வு அல்ல என்றும் கூறினார்கள்.

# தோற்பதற்கு வாக்களித்து சந்தர்ப்பத்தை சீரழிக்க வேண்டாம்

## முல்லைத்தீவில் தலைவர் ரிஷாட்!

*சகல மதத்தவர்களும் இனத்தவர்களும் மற்றும் அமோக மக்கள் ஆதரவுள்ள கட்சிகளும் சஜித் பிரேமதாசவின் வெற்றிக்காக உழைக்கையில், உதிரிகள் சிலர் வேறு வேட்பாளர்களுக்காக உழைப்பது கவலையளிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.*

*ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, முல்லைத்தீவில் இன்று காலை (02) இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்ததாவது*

*“சஜித் பிரேமதாசவின் வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிட்டது. நாடளாவிய ரீதியாக ஏற்பட்டுள்ள மக்கள் அலையைத் தடுத்து, திசை திருப்ப எந்த வேட்பாளர்களாலும் இனி இயலாது. எஞ்சியுள்ள காலங்களிலும் சஜித்துக்கான ஆதரவு அலைகள் உச்சம் தொடவுள்ளன. இந்நிலையில், வங்குரோத்து வாய்வீரர்களைக் களமிறக்கி, மக்களை ஏமாற்ற முயற்சிக்கப்படுகிறது. இந்த மண்ணுடனும் பிரதேசத்துடனும் பரிச்சயம் இல்லலாத பலர் வந்து வழங்கும் வாக்குறுதிகளை நம்பாதீர்கள்.*



*யுத்தம் முடிந்த பின்னர், இப்பகுதிக்கு நானே வந்தேன். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் அமைச்சராகவும் பல வேலைகளைச் செய்தேன். மெனிக்பார்ம் முகாமில் மக்களைக் குடியேற்றினேன். காணிகள் இல்லாதோருக்கு காணி வழங்கினேன். வைத்தியசாலைகள், பாடசாலைகளை நிர்மாணித்தேன். ஆயிரம் பேருக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்டன. வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இனம், மதம், கட்சி பாகுபாடின்றி இவற்றை நாம் செய்தோம். மனச்சாட்சி உள்ளவர்கள் இவற்றைச் சிந்தித்து, நாம் ஆதரிக்கும் வேட்பாளர் சஜிதுக்கே வாக்களிக்க வேண்டும்.*

*எஞ்சியுள்ள நமது அபிவிருத்தி வேலைகளைப் பூர்த்தி செய்ய, சஜித் பிரேமதாசவையே ஜனாதிபதியாக்க வேண்டும். தோற்கப்போவோருக்கு வாக்களித்து, ஜனநாயகத்தின் பெறுமானத்தை சீரழிக்காதீர்கள். நமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து கிடக்கிறது. கொடுங்கோலன் கோட்டாபய ராஜபக்ஷவின் இனவாதமும் இறுமாப்புமே நமது பொருளாதாரத்தை வங்குரோத்தாக்கியது. விரட்டப்பட்ட கொடுங்கோலனின் எஞ்சிய ஆட்சிக*

*இதையறிந்துதான், தமிழ் தேசிய கூட்டமைப்பும் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது. சமூகம்சார் கட்சிகளின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டு, சமூகத்தை காட்டிக்கொடுத்துவிடாதீர்கள். சஜித்தை தோற்கடிப்பது கொடுங்கோலனின் சகபாடிகளையே பலப்படுத்தும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிஷாந்த மற்றும் ஸ்ரீபால ஆகியோர் எம்முடன் இணைந்தமை இதனையே உணர்த்துகிறது” என்றார்.*

# நாட்டையும், நாட்டு வளங்களையும் சூறையாடித்த கள்வர் கூட்டத்தை வீட்டுக்கு அனுப்புவோம்

## அ.இ.ம.கா. கல்முனை தொகுதி அமைப்பாளர் முபீத் தெரிவிப்பு

(எம்.எப்.எம். றியாஸ்)

நமது நாட்டையும் நாட்டில் உள்ள வளங்களையும் கையிருப்பில் இருந்த டொலர்களையும் சூறையாடி கொள்ளையடித்த கள்வர் கூட்டத்தினையும் இனவாதிகளையும் ஒட்டுண்ணிகளையும் எதிர்வரும் தேர்தலுடன் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இவர்கள் தங்களது லேபலை மட்டும் மாற்றி விட்டு நாட்டை சீரழிக்க ஆட்சி பீடம் ஏற நினைக்கிறார்கள். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என கால்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை தொகுதி அமைப்பாளருமான சி.எம்.முபீத் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் இளைஞர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா இந்த தேர்தலிலே வெற்றி பெறுவது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகி இருக்கின்ற நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற



இளைஞர்களும் இதனுடன் இணைந்து பயணிக்க வேண்டும்.

எல்லா வகையான வேலைத் திட்டங்களிலும் கொள்ளையடிப்பதையும் சுரண்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தவர்களால் தான் இந்த நாடு பெரும் பஞ்சத்தை அனுபவித்தது. இதனால் நாட்டு மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல.

இப்படிப்பட்டவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவது இந்த நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

எனவே நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும். அது சஜித் பிரேமதாச அவர்கள் ஆளுகின்ற ஆட்சியாக அமைகின்ற போது, இந்த நாடும் நாட்டு மக்களும் சுபீட்சம் பெற்றவர்களாக மாற முடியும். எமது தலைவர் ரிசாத் பதியுதீன் அவர்களுடைய கரத்தை பலப்படுத்துவதன் மூலம் சஜித் பிரேமதாசாவை வெற்றி பெறச் செய்து நாட்டில் ஒரு நல்லாட்சி மலர நாம் முன்வர வேண்டும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது உதாசீனப்படுத்தி சர்வதேசத்தின் உதவியோடு ஊழல் மோசடி செய்து நாசகார செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெற முயற்சித்தால் அவ்வாறானவர்கள் மீண்டும் ஒரு மக்கள் புரட்சியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர்கள் நாட்டை விட்டு ஓடும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இளைஞர்களாகிய நாம் கிராமம் கிராமமாக, வீடு வீடாக சென்று சஜித் பிரேமதாசாவின் டெலிபோன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மக்களை திரட்ட வேண்டும். ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளை கும்பலை வீட்டுக்கு அனுப்ப முடியும்.

இந்தத் தேர்தலில் கொள்ளை கும்பலுடன் இணைந்து இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைவதுடன், ஜனநாயகத்தையும் ஜனநாயக ஆட்சியையும் நேசிக்கின்ற சஜித் பிரேமதாச அவர்கள் அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக திகழ்வார் என்பதில் ஐயமில்லை” எனவும் கூறினார்.

## அநுர குமார ஜனாதிபதியானால்,

# இந்திய - சீன“ மோதலுக்கு இலங்கை முகம் கொடுக்க வேண்டி வரும்

## சி.வி. விக்னேஷ்வரன் எச்சரிக்கை



(ஐ.ஏ. காதிர் கான் )

*“அநுர குமார ஜனாதிபதி பதவிக்கு எவ்வகையிலும் தகுதியில்லாதவர்” என, பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஷ்வரன் குறிப்பிட்டார்.*

*யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் கூறுகையில்,*

*“அநுர குமார ஆட்சிக்கு வந்தால், அவரால் பொருளாதாராத்தை*

*ஒருபோதும் முன்னெடுத்துச் செல்ல முடியாது” என்று சுட்டிக் காட்டினார்.*

*“மேலும், அநுர குமார ஜனாதிபதியானால், “இந்திய - சீன“ மோதலுக்கு இலங்கை முகம் கொடுக்க வேண்டி வரும்” என்றும் எச்சரிக்கை விடுத்தார்.*






நாச்சியாதீவு பர்வீன்

-கெகிராவ ஸுலைஹா-

நூல்வெளியீட்டு நிகழ்வுகளுக்கு கிண்ணியா போய் வந்தேனாயினும், மூதூர் மொகமட் ராபியின் “தூக்கணாங் குருவிகள்”சிறுகதைத் தொகுப்பை இப்போது தான் கையில் எடுக்க முடியுமாயிற்று.

கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2023 ம் ஆண்டு வெளியீடு. கிட்டத்தட்ட பத்து கதைகள் உள்ளன தொகுப்பில்.

அட்டைப்படம் தோழர் அவர்கள் செய்து அனுப்பியது என்று அவர் சொல்லி அறிந்திருந்தேன். அவர் செய்து அனுப்பிய அந்த அட்டைப் படத்தில் இருந்த துல்லியம் இந்த நூலில் அட்டையில் ஏனோ இல்லை என்பது கவலையாயிற்று. எனினும், ராபியிடம்

நான் அது குறித்து பேசியிருக்க வில்லை.

“நிலவு தூங்கும் நேரம்“ இத்தொகுப்பில் முதல் கதை. ஆங்கிலக் கதை பாணியில் சடாரென வேறு ஒரு திருப்பத்தில் முடிவடைகிற கதை அது. அதன் நம்ப முடியாத முடிவு கண்டு, நான் விக்கித்து நிற்கிறேன்.

எளிதில் வளையாத, மேலும் எவராலும் மெச்சத்தக்க திருக்குணங்களை யுடைய ஒரு ஆண், ஒரு பெண்ணின் ஏமாற்றுக் குணங்கள், கெடுபுத்தி காரணமாக பிறழ்ந்து சடாரென்று பென்னம் பெரிய இன்னலுக்கு ஆளாகும், தன் இறுதிப் புள்ளியை சந்திக்கும் விதத்தை சொல்கிறது கதை.

வெற்று மயக்கத்தை உடைய உலகை தன் வாசகனுக்குச் சொல்ல நிலவை அடிக்கடி துணைக்கு அழைப்பார் ராபி.“சோபையிழந்த நிலவு“ தொடுவானில் முளைக்கிறது ஒரு கட்டத்தில். ரமீஸ், சுனீத்தாவிடம் அன்பு காட்ட தொடங்குகிறான். “மேற்கு வானில் பிறை நிலவு சரிந்து கொண்டிருந்தது “ ரமீஸ் இறுதி முடிவை சந்திக்கிறான். உண்மையிலேயே நிலவு தூங்கும் நேரத்தில் இப்படி இப்படி என்னென்னவோ எவரெவர்க்கோ நடந்து விடுகின்றன.பெரிய அலம்பல்கள் எதுவும் இல்லாத நல்ல எழுத்து. முன்பு வாசித்ததில் இருந்து மிக சாதாரண ஜனரஞ்சக எழுத்து என்பதாக விளங்கி வைத்திருந்தேன்.. இவை ஒரு வளர்ச்சிப் போக்கை காட்டி நிற்கின்றன.

ஆமாம், அப்படி உணர்கிறேன்.

“பேரீட்சை முட்கள்“ ரிசானா துயரம் சொல்வது. பள்ளி துள்ளல் கனவுகள், வீடு, தம்பி தங்கை பாசம், உம்மா வாப்பா அன்பு, காப்பு எல்லாம் விட்டு நீங்கி வெளிநாட்டுப்பணிக்கு வயசுக்கு முன்னமேயே அனுப்பப்படும் ரிசானா, அங்கு சந்திக்கும் கொடு விதி இலங்கை மக்கள் ஒரு போதும் மறக்க முடியாத வெந்துயர். சொல்லத் தெரியாத ஒரு கனல் நெருப்பு நம் நெஞ்சில் எரிகிறது. ராபியின் எழுத்து இறங்குகிறது உள் ஆழத்தில்.அந்தப்பிரதேச




எழுத்தை,மண் மணத்தை சொட்டச் சொட்ட வடிக்கும் எழுத்து..

கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. சரவண முத்து நவநீதன் அவர்கள் சொல்வது போல சூழலில் தனது கற்றலை, கற்பனைத் திறன் கலந்து, அழகு மிகுந்த எண்ணப் பாங்குடன் தரும் இந்த எழுத்துகள் அனுபவத்தில், படைப்பாற்றலில், ராபி தொட முயலும் உயரத்தை கோடி காட்டுகின்றன.

“காதல் கவிதா விலாசம்“ ஒரு அழகான கதை. கவிதா என்ற இளம் சிட்டுப்பெண்ணின் தீராத காத்திருப்பின் கதை. யுத்தம் அவள் கனவை தின்றழித்தது தெரியாமல் காத்திருக்கிறாள் அவள். காத்திருக்கிறாள்..காத்திருக்கிறாள். முடிவே இல்லை அவளின் காத்திருப்புக்கு.. காணாமல் போனோர் பற்றிய துயரப் பாட்டுகள் கேட்கின்றன.மனம் உருகிக் கிடக்கிறது. குடை நிழலை அவளுக்கு யார் வழங்க?

“அன்பே வா அருகிலே“, எண்ணங்களும் பிரமைகளும் பற்றிய ஒரு வித்தியாசமான கதை. ஆவி உலவுவதான நம்பிக்கைக் கொள்ள வைக்கும் ஒரு அறைக்கு, ஒருநாள் தனியே செல்லும் ஒரு பெண் அங்கு இறந்து கிடக்கக் காணுகிறோம். ஒளிந்து உலவிக் கொண்டிருக்கிற ஆவிகள், பேய்கள்,அவை பற்றிய புனைவுகள், நம்பிக்கைகள் குறித்து கவனம் செலுத்த நம்மை பணிக்கின்றனவா இந்தக் கதை? என்னாகியிருக்கும் அவளுக்கு உண்மையில்? வாசகர் மனசில் கேள்விகள் வௌவால்கள் போல தொங்காட்டமிடப்பட நாயகன் அவனின் இரவுகள் இனி என்றும் தூங்க வாய்ப்பில்லை போல.. ஒன்றும் தெரியவில்லை.

அன்று கிண்ணியாவில் அந்த வெளியீட்டு நிகழ்வில் நூல் பற்றி சட்டத்தரணி அவர்கள், பேராசிரியர் அப்துல் பரீத் முஹம்மது பரீத். போன்றோர் ஆய்வு செய்து பேசியிருந்தார்கள்.

அந்நிகழ்வுக்குப் போகும் முன்னம் நூலை வாசித்து விட்டிருந்தேன் எனில், அங்கு உரையாற்றியோர் பேசிய பெறுமதி மிக்க பேச்சுகளில் என் கருத்துகள் என்னவாறு கலக்கின்றன, ஒத்து அன்றி வெட்டிப் போகின்றன என்றும் பார்த்திருக்கலாம்.

மற்ற சில கதைகளையும் வாசித்து இன்னும் எழுதுவேன்.

# கருக்கலைப்பு

கத்தரிக்கோல்
நுனியில் குத்தி, குத்தி
எப்படி உடைத்தாய் அவ்வாறு
துண்டுத் துண்டாகக் காதலை,

கடும் இரத்த நிறத்தில்
பச்சை இரத்த வாடையில்
ரோஜாப் பூவுக்கு நிறங்
கொடுக்க
மூச்செடுக்கின்ற காதலை

ஆழ ஊடுருவிய
இரத்த நரம்புகளுக்கு
கண்களைத் திறக்கின்ற காதல்
எந்த மனதால் கொலை
செய்தாய் அவ்வாறு?

சாட்சிகள் இல்லாத கொலை
மனது மட்டுமே அறிந்த
வழக்குகள் இல்லாத
கண்ணீர் இல்லாத
விம்மல்கள் ஊமையான
அப்பாவி மரணம் அது
நீயே அறிந்த

ஒரு நாள்
இரு நாட்கள்
மூன்று நாட்கள்
கண்ணீர் சொறிந்து
மறந்துவிட மனதைத்
தேற்றிக் கொண்டாலும்
உயிர் துடிக்க துடிக்க
இறந்த காதல்

இறப்பின் பின்னரான
ஆத்மாவுக்கு இல்லை
தாய் வயிறு வேறு இல்லை
வேறு எங்கேயும்
வாழ்க்கையிலேயே சந்திக்கக்
கூடியதாக

- சமன் விஜேசூரிய
- தமிழில் - இப்னு அஸூமத்

பஸ்னா இக்பால்

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கல்வி கற்ற இவர் பல வருடங்களாக எழுத்துத்துறையில் தடம் பதித்து வருகிறார்.

இவர் எழுத்துத்துறைக்காக கலாபூஷணம் விருது பெற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த மர்ஹூம்களான பரீட்-றஸீனா தம்பதியினருக்கு 26-04-1959 இல் மூத்த மகனாக பிறந்தார். இவர் பத்திரிகைகளில் சர்வதேச தினங்கள், உலக நாட்டு தலைவர்களின் வரலாறுகள், விஞ்ஞானிகளின் வரலாறுகள், இஸ்லாமிய கட்டுரைகள், சிறுகதைகள், உலக புதினக் கட்டுரைகள், சமூக விழிப்புணர்வு கட்டுரைகள் போன்ற பல ஆக்கங்களை திறம்பட படைத்துள்ளார்.

இவர் பல வரலாற்றுத் தொடர்களையும் எழுதி மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். ஞாயிறு வீரகேசரியில் அறிஞர் அண்ணா, எம். ஜி.ஆர். தமிழ்த்தந்தியில் நெல்சன் மண்டேலா, பிடல் காஸ்ட்ரோ போன்றவர்களின் வரலாற்று தொடர்கள் இவரது சிறந்த படைப்பாகும். இன்றும் தினகரன் வாரமஞ்சரியில் இவர் நெல்சன் மண்டேலாவின் வரலாறை ”கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா” எனும் தலைப்பில் வரலாற்றுத் தொடரை எழுதி வருகிறார்.

பன்முக ஆளுமை கொண்ட இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், முஸ்லிம் சேவையில் ”இஸ்லாமிய புத்தாண்டு முஹர்ரம்”, ”கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்களின் இனிய நினைவுகள்” எனும் தலைப்புகளில் ஆக்கங்களை தயாரித்து குரல் பதிவும்



கொடுத்துள்ளார்.

யாழ்.பரீட் இக்பாலின் விருதுகளாக கலாபூஷணம் விருது மட்டுமின்றி ”யாழ்.முஸ்லிம் இலக்கிய ஜோதி”, ”ரத்ன தீபம்”, ”தேசோதய தீபம்”, ”கலைமாமணி”, ”தேசாபிமானி இலக்கிய செம்மல்” ஆகிய பல விருதுகளையும் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

யாழ் மண்ணில் பிறந்த இவர், இன்று பல ஊர்களிலும் சிதறி வாழ்ந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் எனும் குழுமத்தினை உருவாக்கி ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுடன் பல வருடங்களாக பயணித்து சேவையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிர்வாக சபை உறுப்பினராக வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். யாழ் பரீட் இக்பால் ஊடகத்துறையிலும் கலைத்துறையிலும் மென்மேலும் வளர்ந்து பிறந்த யாழ் மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

# நான் ஜனாதிபதியாவது உறுதி! எனக்கு 70 வீத வாக்குகள் கிடைக்கும்

### அநுர குமார திஸாநாயக்க தெரிவிப்பு

(ஐ. ஏ. காதிர் கான் )

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி நிச்சயமாக 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறும்" என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சில நேரங்களில், இது 60-70 வீதம் வரை உயரும் என்றும் பெலவத்தையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்..



கோத்தாபயவின் 69 இலட்சத்தில் 50 இலட்சம் பேர், பாரம்பரிய பொதுஜன பெரமுன கட்சியல்ல.

அதேபோல், சஜித்திற்குக் கிடைத்த 55 இலட்சம், சஜித்தின் சொந்த வாக்குகள் அல்ல. அது, கோத்தாபயவிற்கு எதிரான வாக்குகள்.

இந்நிலையில், கட்சிகளிடம் 80 இலட்சத்துக்கும் அதிகமான எழுதப்படாத வாக்குகள் உள்ளன. 12 இலட்சம் புதிய வாக்குகள் உள்ளன.

எனவே எமது கட்சி 70 இலட்சம் வாக்குகளை பெரும். மேலும் அரசியல் கண்ணோட்டத்தில் 51 வீதத்தை விட அதிகமாகவே உள்ளது. இது 60 -70 வீதங்களுக்கு அதிகரிக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் நாட்டில் மதங்கள் இருக்காது

### ஆனந்த ரெனரோல்

( ஐ. ஏ. காதிர் கான் )

"மக்கள் விடுதலை முன்னணி ஆட்சிக்கு வந்தால், நாட்டில் மதங்கள் இருக்காது" என, ஐக்கிய தேசியக் கட்சியின் பத்தேகம முன்னாள் அமைப்பாளர் ஆனந்த ரெனரோல் பத்தேகம பகுதியில் (30) இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இதன் போது அவர், "ஜே.வி.பி. பின்பற்றும் கம்யூனிஷக் கொள்கைகளைப் பின்பற்றி ஒழுகும் சீனா, வியட்நாம், மியன்மார், கியூபா, வட கொரியா போன்ற எந்த ஒரு நாட்டிலாவது சமூக வலைத் தளங்கள் உள்ளதா? அல்லது ஊடக சுதந்திரம் தான்



உள்ளதா ? என கேட்க விரும்புகின்றேன்" என்றும் ஜே.வி.பி. யின் வங்கிக் கணக்கில் 800 கோடி ரூபா பணம் உள்ளது. இதிலிருந்து ஒரு பாடசாலை பிள்ளைக்காவது அப்பியாசக் கொப்பி வாங்கிக் கொடுத்திருப் பார்களா ?" என்றும் குற்றம் சுமத்திப் பேசினார்.

# கட்சி மாறுவது சமூகத்துக்கு சாபக்கேடாகவே அமையும்:

### முன்னாள் எம்.பி.நவவி தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரவளிக்கப்போவதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மைகளும் இல்லை என்றும் தலைமையின் தீர்மானத்தைப் பலப்படுத்துவதற்கு, சஜித் பிரேமதாசவையே ஆதரிக்கப் போவதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவவி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி கூறுகையில்.

"எனது கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலேயே நான் உள்ளேன். என்னை தேசியப் பட்டியலில் எம்.பியாக்கி, புத்தளம் மாவட்டத்தை கௌரவப்படுத்திய கட்சி இது. வழங்கிய வாக்குறுதியை காப்பாற்றி, புத்தளம் மாவட்ட மக்களை கௌரவப்படுத்திய எமது கட்சியின் தலைவரான ரிஷாட் பதியுதீன் நேர்மையான அரசியல்வாதி. அவருக்குத் துரோகமிழைப்பது சமூகத்துக்கான சாபக்கேடாகவே அமையும்.

அதிகார ஆசைகளுக்காகக் கட்சி தாவியோர், அரசியலில் நிலைத்ததாக வரலாறு இல்லை. சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் இந்த ஜனாதிபதித் தேர்தலில், எமது கட்சியின் தலைவர் சரியான தீர்மானத்தையே எடுத்துள்ளார். இத்தீர்மானத்தையே நாம் பலப்படுத்த வேண்டும்.

தேர்தல் காலங்களில் இவ்வாறான வங்குறோத்து வதந்திகள் பரவுவது



வழமையே! ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# பலஸ்தீன தூதுவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைப்பு

(பீ.எம். முக்தார்)

பணி நிறைவுபெற்று செல்லும் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் டாக்டர் சுஹைர் ஹம்தல்லாஹ் தார் ஸெய்தினை கௌரவிக்கும் முகமாக, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் ஏற்பாடு செய்த பிரியாவிடை நிகழ்வு (19) கொழும்பு ரமதெல்லா ஹோட்டலில் இடம்பெற்றது.

நிகழ்வின்போது சம்மேளனத்தின் களுத்துறை மாவட்டச் செயலாளர் எம்.எச். சம்சுல் மக்கி இலங்கை



வடிவம் பொறிக்கப்பட்ட ஞாபகச் சின்னமொன்றை அன்பளிப்புச் செய்தார். இதன் போது நிர்வாகக் குழு உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# களுத்துறை, புத்தளம் மாவட்டங்களுக்கான இணைப்பாளராக ரூமி ஹாசீம் நியமனம்

(பேருவளை பீ.எம் முக்தார்)

ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டாக்டர் ரூமி ஹாஷிம் அக் கட்சியின் ஜனாதிபதி தேர்தலுக்கான களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்களுக்கான செயற்பாட்டு இணைப்பா ளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக்



கடிதத்தை கட்சித் தலைவரும் எதிர் கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச வழங்கி வைத்தார்.

# மாணவன் உமர் வபா கணித அறிவுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்




(ஏ.ஏ.எம். பாயிஸ்)

லண்டன் சர்வதேச சிதம்பரா நிறுவனம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய கணித அறிவுப் போட்டியில் மாவனல்லை ஹெம்மாதகம கே/பள்ளிப்போருவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 9யில் கல்வி கற்கும் உமர் வபா எனும் மாணவன் தங்கப் பதக்கம் வென்று சாதனை நிகழ்த்தியுள்ளார்.

இவர் மாவனல்லை ஹெம்மாதகம பகுதியை சேர்ந்த மொஹமட் வபா, அஸ்மியா தம்பதிகளின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட இப்போட்டியில் கணித அறிவுடைய கணிசமான மாணவர்கள் பங்குபற்றியதுடன் இப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மாணவர்களை பாராட்டும் நிகழ்வு யாழ்ப்பாண முத்து மாரியம்மன் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஒலுவில் அல்-ஹம்றா மாணவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான பயிற்சி நெறி





(இஸட்.ஏ. றஹ்மான்)

ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் போதைப் பொருள் தடுப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி நெறி (29) மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் 35 பேர் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பெற்றனர்.இந்நிகழ்வில் பொலிஸ் கெடட் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சிந்தக குணரத்னவின் தலைமையில் உயர் பயிற்சி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்தவின் வழிகாட்டலில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண அவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 45

# இளம்பருவ மன ஆரோக்கியம்

இளம்பருவம் என்பது 10 முதல் 19 வயது வரையிலான பிள்ளை பருவத்திற்கும் முதிர்வயதுக்கும் இடைப்பட்ட வாழ்க்கையின் ஒரு கட்டமாகும். இது மனித வளர்ச்சியின் ஒரு தனித்துவமான கால கட்டமாகும். மனித வாழ்க்கையின் நல்ல ஆரோக்கியத்திற்கான அடித்தளங்களை அமைப்பதற்கான முக்கியமான பருவகாலமுமாகும்.

இளம் பருவத்தினர் விரைவான உடல் மற்றும் உளவியல் வளர்ச்சியை அனுபவிக்கின்றனர். அத்துடன் இப்பருவத்தில் சிறந்த அறிவாற்றலும் வளர்ச்சி அடைகிறது. இந்த வளர்ச்சிகள் யாவும் அவர்கள் எப்படி விடயங்களை உணர்கிறார்கள், எப்படி சிந்திக்கிறார்கள், எப்படி முடிவுகளை எடுக்கிறார்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதில் எல்லாம் செல்வாக்குச் செலுத்துகிறது.

இளம்பருவ மன ஆரோக்கியம் என்பது இளம் பருவத்தினரின் உணர்ச்சிகள், சிந்தனைகள், அவர்களது மன ஆரோக்கியம் என்பவற்றுடன் தொடர்பு பட்டுள்ளது. பொதுவாக 9 முதல் 18 வயதுடையவர்கள் கட்டிளைஞர் என வரையறுக்கப்படுகிறார்கள். ஒரு கட்டிளைஞனின் வாழ்க்கையில் இந்தப் பருவம் முக்கியமானது. ஏனெனில் அவர்களின் மூளை விரைவான வேகத்தில் முதிர்ச்சியடைகிறது. அதனால் நல்ல மன ஆரோக்கியத்தைப் பேணுவது மிகவும் முக்கியமானது.

உலகளவில் 10-19 வயதுடைய ஏழு பேரில் ஒருவர் மனநலக் கோளாறை அனுபவிக்கிறார் என உலக சுகாதார அமைப்பு தகவல் படுத்தியுள்ளதை காணலாம். இது உலகளாவிய நோய் சுமைகளில் 13% ஆகும்.

மனச்சோர்வு, பதட்டம் மற்றும் நடத்தை கோளாறுகள் என்பன இளம் பருவத்தினரிடையே நோய் மற்றும் இயலாமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

அதே சமயம் 15-29 வயதிற்குட்பட்டவர்களிடையே மரணத்திற்கான நான்காவது முக்கிய காரணமாக தற்கொலை இருப்பதாகவும் அந்த நிறுவனம் 17 நவம்பர் 2021 இல் வெளியான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பருவ வயதினரின் மனநல ஆரோக்கியத்தை முறையாக கையாளத் தவறுவதன் விளைவுகள் சாதாரணமானதல்ல. அது முதிர்வயது வரை நீடிக்கின்றது.

அத்துடன் அது அவர்களின் உடல் ஆரோக்கியத்தையும் மன ஆரோக்கியத்தையும் கடுமையாக பாதிக்க வைக்கிறது.

அவர்கள் பெரியவர்களாக ஆகும் போது திருப்திகரமான வாழ்க்கையை நடத்துவதற்கான வாய்ப்புகளை கட்டுப்படுத்துகிறது.

இந்த நிலை ஆரோக்கியமானதல்ல.

எமது பொறுப்பு

எமது கட்டிளைஞர்களின் மனநலத்தை மேம்படுத்துவது எமது கடமையாகும்.

- ஒவ்வொரு தனிநபரின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறனை வலுப்படுத்த தடுப்பு நுட்பங்களை நாம் காட்டிக் கொடுக்க வேண்டி இருக்கிறோம்.

- ஆபத்தான நடத்தைகளில் இருந்து தப்பிக்கவும் மாற்றுத் தீர்வுகள் பெறவும் வழிகாட்ட வேண்டி இருக்கிறோம்.

- கடினமான சூழ்நிலைகள் மற்றும் துன்பங்களை நிர்வகிப்பதற்கான மன தைரியத்தை வளர்ப்பதன் அவசியம் பற்றி கற்றுக் கொடுக்க வேண்டி இருக்கிறோம்.

- அவர்கள் வாழ்வின் எழுச்சிக்காக ஆதரவான சமூக சூழல்கள் மற்றும் சமூக வலைப்பின்னல்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டி இருக்கிறோம்.

இளம் பருவத்தினரின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் வெவ்வேறு சமூக அமைப்புகளின் பங்களிப்பு முதன்மையானது. எடுத்துக்காட்டாக பாடசாலை, பள்ளிவாசல்கள், சுகாதாரம் அல்லது சமூக பாதுகாப்பு அமைப்புகள், இளைஞர் கழகங்கள், சமூக அபிவிருத்தி நிறுவனங்கள் போன்ற அமைப்புகளின் சேவைகளும் வழிகாட்டல்களும் கட்டாயம் தேவைப்படும்.

இளம் பருவத்தினரின் மன ஆரோக்கியம்

- மகிழ்ச்சியான, நேர்மறையான வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது. - நல்ல மன ஆரோக்கியம் கொண்ட இளம் பருவத்தினர் பொதுவாக தங்களைப் பற்றியும் தங்கள் வாழ்க்கையைப் பற்றியும் நேர்மறையாக உணர்கிறார்கள்.

- நல்ல உறவுகளை தேர்வு செய்வார்கள்.

- ஆரோக்கியமான பழக்க வழக்கங்களளை கடைபிடிப்பார்கள்.

- முறையான உணவு தேர்வுகளை பின்பற்றுவார்கள்.

- தவறாமல் உடற்பயிற்சி செய்வார்கள்.

- நன்றாக தூங்குவார்கள்.

- பயனும் பெறுமதியும் நிறைந்த நல்ல மனிதர்களாக வாழ்வார்கள்.


இளம்பருவ மனநலம் முக்கியம் என்பதால், ஆரோக்கியமான இளம் பருவத்தினரை உருவாக்க, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும், மேலும் பிள்ளைப் பருவத்தில் இருந்தே அவர்களுக்கு ஆதரவாக இருக்க நுட்பங்களை நாம் உருவாக்க வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




பயாஸா பாஸில்



மண வாழ்க்கைக்கு தேவை உண்மையான பாசத்துடன் கடைசி மட்டும் கூடவே வரும் உறவு.

# உண்மையான பாசம் கடைசிவரை வேண்டும்

ஒவ்வொருவருடைய குடும்ப வாழ்வில் விட்டு கொடுப்பு முதல் முக்கியம்.

ஒருவரை ஒருவர் நன்றாக புறிந்து கொள்ள வேண்டும்.

”ஆசை 60 நாள் மோகம் 30 நாள்” இது தான் இன்றையவர்களின் வாழ்க்கை

வாழ்க்கை இதுவல்ல அன்பு எப்பவும் இருக்க வேண்டும் நீ மணம் முடிக்கும் முன் எப்படி வேண்டுமானாலும் இரு மணம் முடித்த பின் ஒருவொருக்கு ஒருவர் உயிராக உறவாக இரு.

உங்கள் துனையுடன் அன்பு பகிரப்படாத நேரத்தில் வேறு ஒரு துணையை, அன்பை தேடுவது காமத்திற்கு அல்ல அது பாசத்திற்கு...

இன்றைய பல கணவன்கள் நினைப்பது வயிற்றில் பிள்ளையை கொடுத்தோம், உண்பதற்கு உணவு கொடுக்கிறோம், உடுத்த உடை கொடுக்கிறோம் இதை விட என்ன வேண்டும் என்று...

மனைவி எதிர்பார்ப்பது கணவன் தன் மீதான பாசத்தை, அன்பை, அவள் வலிகளை, உணர்வுகளை பகிர்ந்து கொள்ள அவளுக்கு அவன் உயிருக்கு மேலாகா உண்மையான பாசத்தை தான் எதிர் பார்க்கிறாள்.

இதில் குறை யார் மீது மனைவி மீதா இல்லை கணவன் மீதா...??

சில கணவன்மார் இரண்டு, மூன்று குழந்தைகள் பிறந்த பின் மனைவியுடன் நெறுங்குவதை தவிர்த்து மாற்றான் தோட்டத்து மல்லிகையை ரசிக்கிறார்கள்.

ரோஜா இதழை ஒவ்வொன்றாக பிரித்து ரசித்து பார் அது போல தான் உன் மனைவி அவள் அழகிலும், பாசத்திலும் குறைந்தவள் அல்ல அவளை சரியாக கணவன்கள் புரிந்து கொள்ளவில்லை.

அது போல தான் மனைவிமாரும் கணவன்களை அடக்கி ஆள நினைக்காதீர்கள், தொட்டதுக்கெல்லாம் சந்தேகம் கொள்ளாதீர்கள்.

ஒரு மனதோடு வாழ்ந்தாலும், மனதை பறிகொடுத்து வாழ்ந்தாலும், மறுமணம் முடித்து வாழ்ந்தாலும் கடந்த காலங்களை பற்றி நினைக்காதீர்கள், பேசாதீர்கள் நாளையதை மட்டும் நினையுங்கள், பேசுங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

# பாசமிகு மகள்மார்க்கு சமர்ப்பணம்

யதார்த்த உலகில்
மகள்மாரைப் பெற்ற தந்தைகளின்
பாக்கிய நிலை உங்களையும் என்னையும்
இலகுவில் நெகிழ வைத்துவிடும்

‘தந்தை-மகன்’ உறவிற்க்
மதிப்பு
மரியாதை
பய பக்தி
இவ்வாறான ஏராளக் கருங்கற்களால்
ஒரு பாலம் அமைத்து
அந்த உறவைத் தொடுக்க வேண்டியிருக்கும்

ஆனால்
தந்தை-மகள் உறவில்
‘பாசம்’ எனும் ஒற்றை முண்டுக்கல்லே
இராமர் பாலத்தை தொடுக்கும் அளவிற்கு
அந்த உறவை பூரணமாக்கி விடுகிறது

வெளியில் இருந்து பார்ப்பவர்களை
வியக்க வைக்கிறது
மலைப்பூட்டவும் தவறுவதில்லை

தனது தந்தை மீது மகள் கொண்ட பாசம்
அவளுக்கு உள்ளிருந்து
சக்தி வழங்குகிறது.
பாதுகாப்பை உணர வைக்கிறது
ஒழுக்கத்தையும் கற்றுத் தருகிறது





அரபாத் பஹுர்தீன்



# அதிக கோல்கள் அடித்தமைக்காக ரொனால்டோவிற்கு சிறப்பு விருது

UEFA சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரராக போர்த்துகல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால் டோவுக்கு சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
மொனாக்கோவில் உள்ள கிரிமால்டி மன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற விழாவில் அவருக்கு இந்த விருது வழங்கிவைக்கப்பட்டுள்ளது.
"சாம்பியன்ஸ் லீக் போட்டியின் எல்லா நேரத்திலும் அதிக கோல்கள் அடித்தவர் என்பதற்காக, இந்த விருதைப் பெறுவதில் பெருமை அடைகிறேன்.
இந்த பாதையில் ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி" என ரொனால்டோ தெரிவித்துள்ளார்.
உலகின் முதன்மையான கழகப் போட்டியில் ரொனால்டோவின் சிறந்த பாரம்பரியத்தை இந்த விருது கொண்டாடுகிறது.
UEFA சாம்பியன்ஸ் லீக்கில் ஸ்போர்ட்டிங் கழக டி போர்ச்சுகல், மான்செஸ்டர் யுனைடெட், ரியல் மாட்ரிட் மற்றும் ஜூவென்டஸ் அணிகளுக்காக விளையாடிய ரொனால்டோ, 183 போட்டி களில் 140 சாம்பியன்ஸ் லீக் கோல்களை அடித்துள்ளார்.
சுமார் 18 ஆண்டுகளாக UEFA சாம்பியன்ஸ் லீக்கில் விளையாடிய அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.
ரொனால்டோவின் அற்புதமான சாதனையில் ஏழு தனித்தனி சாம்பியன்ஸ் லீக் சீசன்களை முன்னணி வீரராக முடித்தது, வேறு எந்த வீரரும் செய்யாத சாதனையாகும்.
மேலும், ஒரு சாம்பியன்ஸ் லீக் பருவத்தில் அதிக கோல்கள் அடித்த சாதனையையும் ரொனால்டோ படைத்துள்ளார், இதன்படி, 2013/14 பருவத்தில் அவர் 17 கோல்களை அடித்துள்ளார்.
போர்த்துகல் அணியின் முன்கள வீரராக ரொனால்டோ மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக ஒரு முறையும், ரியல் மாட்ரிட் அணிக்காக நான்கு முறையும் சாம்பியன்ஸ் லீக்கை வென்றுள்ளார்.
இந்த காலப்பகுதியில் அவர் எட்டு முறை ஹெட்ரிக் கோல்களையும் அடித்துள்ளார்.
இதேவேளை, சர்வதேச போட்டிகளில் 212 போட்டிகளில் 130 கோல்கள் அடித்து அதிடி கோல் அடித்த வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் அதிர்ச்சித் தோல்வியுடன் வெளியேறினார் ஜெக்கோவிச்



நோவக் ஜோகோவிச், 28 ஆம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் அலெக்ஸி பாபிரினிடம் தோல்வியடைந்த தையடுத்து, 18 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக அமெரிக்க ஓபன் நான்காவது சுற்றுக்குள் நுழையும் வாய்ப்பை இழந்துள்ளார்.
அமெரிக்க பொது டென்னிஸ் தொடரின் 3ஆவது சுற்றில் உலகின் 2ஆம் நிலை வீரரான செர்பியாவின் நோவாக் ஜோக்கோவிச் 28ஆம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் அலேக்சி பாபிரினை எதிர்கொண்டார்.
இப்போட்டியில் ஜோகோவிச் எளிதாக வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜோகோவிச்சிற்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் அலேக்சி பாபிரின் முதல் செட்டை 6:4, 2ஆவது செட்டை 6:4 எனக் கைப்பற்றி ஆட்டத்தைத் தன் வசமாக்கினார்.
இருப்பினும், 3ஆவது செட்டை ஜோகோவிச் சிறப்பாக விளையாடி 6:2 என்றப புள்ளியில் கைப்பற்றினார். ஆனால் ஜோகோவிச் 4ஆவது செட்டை 4:6 என இழக்க, 6:4, 6:4, 2:6, 6:4 என தோல்வியடைந்து அமெரிக்க பொது டென்னிஸ் போட்டியி லிருந்து வெளியேறினார்.
இந்த ஆட்டம் 3 மணி நேரமும் 19 நிமிடங்களும் நீடித்தது.
இதன் விளைவாக 24 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற செர்பியன் வீரர் ஜோகோவிச் 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன் முறையாக, இந்த ஆண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஏதுமின்றி ஆண்டை நிறைவு செய்யும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டார்.



# யுனைடட் வெற்றிக்கிண்ணம் கல்பிட்டி பனாக்கோ அணி வசமானது



யுனைடட் கல்பிட்டி விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த அணிக்கு 7 பேர் கொண்ட உதைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் கல்பிட்டி யுனைடட் உதைப்பந்தாட்டக் கழகத்தை 1:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற கல்பிட்டி பனாக்கோ உதைப்பந் தாட்ட அணி சம்பியன் மகுடத்தை தனதாக்கி அசத்தியது.
யுனைடட் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட தைப்பந்தாட்டத் தொடர் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய இரு தினங்களாக கல்பிட்டி அல் மனார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் 21 உதைப் பந்தாட்டக் கழகங்கள் பங்கேற்றிருந்தன.
விலகல் முறையில் இடம்பெற்ற இத் தொடரில் 4 குழுக்கலாக போட்டியில் பங்கேற்ற அணிகள் பிரிக்கப்பட்டு இத் தொடரில் பங்கேற்றிருந்தன. அதற்கமைய முதலாம் திகதி பிற்பகல் 5.15 மணிக்கு ஆரம்பித்த இறுதிப் போட்டியில் கல்பிட்டிப் பிரதேசத்தின் தலைசிறந்த இரு அணிகளான பனாக்கோ மற்றும் கல்பிட்டிய யுனைடட் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடாத்தின.
விறுவிறுப்பாக ஆரம்பித்த இறுதிப் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் கல்பிட்டி யுனைடட் அணி வீரர்கள் கோலுக்கான முயற்சியில் தீரம் காட்டினர். இருப்பினும் பனாக்கோ அணியின் தடுப்பு வீரர்களை கடந்து அவர்களால் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியாமல் போனது. இதனால் முதல் பாதி ஆட்டம் கோல் இன்றி சமநிலை பெற்றது.
பின்னர் ஆரம்பித்த தீர்மானமிக்க 2ஆவது பாதி ஆட்டத்தில் பனாக்கோ வீரர்கள் போட்டியில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். இதனால் தனக்குக் கிடைத்த பந்தினை பனாக்கோ அணியின் வவீரரான அஹதிர் நேர்த்தியாக உயர்த்தி கம்பத்தினுள் அனுப்பி வைக்க முதல் கோலை பதிவு செய்த பனாக்கோ அணி 1:0 என முன்னிலை பெற்றது.
பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் யுனைடட் வீரர்களின் கோலுக்கான முயற்சி கைகொடுக்காமல் போக போட்டியின் முழு நேரம் முடிவில் 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பனாக்கோ அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது.
அதற்கமைய சம்பியனாக தெரிவான பனாக்கோ அணிக்கு சம்பியன் கிண்ணத்துடன் ஐம்பது ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் வழங்கப் பட்டது. அத்துடன் 2ஆம் இடம்பெற்ற யுனைடட் அணிக்கு 2ஆம் இடத்துக்கான கிண்ணத்துடன் 25000 ரூபா ரொக்கப்பணம் வழங்கப்பட்டது.
மேலும் அத் தொடரில் 5 கோல்களை அடித்த பனாக்கோ அணியின் வீரரான அஹதிர் இறுதிப் போட்டியின் நாயகன் விருதையும், தொடர் நாயகன் விருதையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.
அத்துடன் விசேட அதிதிகளாக இப்போட்டிக்கு அனுசரனை வழங்கியவர்களுடன் கல்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிரிசிங்க பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அரபாத் பஹுர்தீன்)

### நுவணிந்துவின் துடுப்பாட்டமும், வனூஜ மற்றும் ஹேமந்தின் பந்துவீச்சும் கைகொடுக்க:

# இலகு வெற்றி பெற்றது இலங்கை ஏ அணி

சுற்றுலா இலங்கை ஏ மற்றும் தென்னாபிரிக்க ஏ அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் நுவணிந்து பெர்ணான்டோவின் 97 ஓட்டங்களின் உதவியுடன் 93 ஓட்டங்களால் இலகு வெற்றி பெற்ற இலங்கை ஏ அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றுள்ளது.
இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் தொடர் மற்றும் 2 போட்டிகள் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் பங்கேற்றுள்ளது. இதில் முதலில் இடம்பெறும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி ஆகஸ்ட் (31) ஆம் திகதி இடம்பெற்றது.
போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க ஏ அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்திருந்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
துடுப்பாட்டத்தில் நுவணிந்து பெர்ணான்டோ 97 ஓட்டங்களையும், கமில் மிஷார 71 ஓட்டங்களையும், ஷமிந்து விக்ரமசிங்க 55 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் டிரிஸ்டன் மற்றும் புலுக்வாயோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.
பின்னர் 299 ஓட்டங்கள் என்ற சவாலான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த தென்னாபிரிக்க ஏ அணி 36.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 93 ஓட்டங்களால் தோற்றுப் போனது. துடுப்பா ட்டத்தில் டொனி டி சொர்ஸி 53 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார்.
பந்துவீச்சில் வனூஷா சஹான் மற்றும் டுஷான் ஹேமந்த ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ஷிராஸ், ஷமிந்து மற்றும் ஷெனால் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.
இவ் வெற்றியின் மூலம் இலங்கை ஏ அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என முன்னிலை வகிக்கிறது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி 2ஆம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.